



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 208 11.03.2026 புதன்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 208 | Wednesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(11–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–27
பிறை: தேய்பிறை
திதி
அஷ்டமி நாளை காலை 4.05 வரை பிறகு நவமி.
நட்சத்திரம்:
கேட்டை இரவு 9.49 வரை
பிறகு மூலம்
யோகம்
சித்த / மரணயோகம்
ராகுகாலம்
நண்பகல்
12.00–1.30 மணி.
எமகண்டம்
காலை 7.30–9.00 மணி.
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4 –5 மணி.

மேஷம் ..................தேர்ச்சி
ரிஷபம்......................தனம்
மிதுனம் ................... பரிசு
கடகம்.......................வரவு
சிம்மம் ..................தெளிவு
கன்னி .................. கடமை
துலாம் ................. இன்பம்
விருச்சிகம்............ஆதரவு
தனுசு....................உயர்வு
மகரம் ....................பணிவு
கும்பம்............... மேன்மை
மீனம் ....................ஆதரவு

# தமிழகம், கேரளத்தில் ரூ.16,450 கோடி திட்டங்கள்: பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்

**சென்னை, மார்ச் 11:**

பிரதமர் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பிரதமர் மோடி புதன்கிழமை கேரளம் மற்றும் தமிழ்நாட்டுக்கு வரவுள்ளார்.

அப்போது திருச்சியில் இருந்தபடி சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த வளர்ச்சி திட்டங்களை அவர் தொடங்கிவைக்க உள்ளார். இதில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு உள்கட்டமைப்பு, சாலை இணைப்பு, ரயில் சேவைகள் உள்ளிட்ட முக்கிய துறைகளின் திட்டங்கள் அடங்கும்.



> திருச்சியில் இருந்தபடி சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த வளர்ச்சி திட்டங்களை அவர் தொடங்கிவைக்க உள்ளார். இதில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு உள்கட்டமைப்பு, சாலை இணைப்பு, ரயில் சேவைகள் உள்ளிட்ட முக்கிய துறைகளின் திட்டங்கள் அடங்கும்

நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ரூ.3,680 கோடிக்கும் அதிகமான முதலீட்டில், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் இயற்கை எரிவாயு விநியோக குழாய்கள் அமைக்கும் திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

இந்தத் திட்டம் மூலம், 8.8 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு குழாய்கள் மூலம் இயற்கை எரிவாயு விநியோகிக்கப்படும்.

சென்னை மணலியில் சுமார் ரூ.1,490 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்ட மசகு எண்ணெய் கலவை ஆலையைப் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார். இந்த ஆலை இந்தியாவின் மசகு எண்ணெய் உற்பத்தித் திறனை வலுப்படுத்தும்.

தமிழ்நாட்டில் 370 கி.மீ.க்கு 89 கிராமப்புற சாலைகளை திறந்துவைக்கும் பிரதமர் மோடி, கங்கைகொண்ட சோழபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலை 81-இல் பசுமை புறவழிச்சாலை அமைக்க அடிக்கல் நாட்ட உள்ளார்.

தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகம், கேரளம், கிழக்கு இந்தியா இடையே ரயில் இணைப்பை வலுப்படுத்தும் வகையில் 2 அம்ருத் பாரத் விரைவு ரயில்கள், 2 விரைவு ரயில்கள், ஒரு பயணிகள் ரயில் சேவையை அவர் தொடங்கி வைக்க உள்ளார்.தமிழ்நாடு மற்றும் கேரளத்தில் மொத்தம் ரூ.16,450 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைப் பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் மீது 20 மடங்கு கூடுதலாக தாக்குதல்: டிரம்ப் மிரட்டல்

**வாஷிங்டன், மார்ச் 11:**



ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டாக இணைந்து கடந்த 28ம் தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உள்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளம் உள்ள நாடுகள் மீதும், இஸ்ரேல் மீதும் ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதேவேளை, ஈரான் புதிய உச்சதலைவராக கமேனியின் மகன் மோஜ்தபா கமேனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஆசியா உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு செல்லும் முக்கிய கடல்வழி பாதையான ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை ஈரான் மூடியுள்ளது. மேலும், இந்த வழியாக கப்பல் போக்குவரத்துக்கு தடை விதித்துள்ளது. இதனால், உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கச்சா எண்ணெய் கொணு செல்லும் கப்பல்களை ஈரான் தடுத்து நிறுத்தினால் அந்நாட்டின் மீது ஏற்கனவே நடத்தப்பட்ட தாக்குதலை விட 20 மடங்கு கூடுதலாக தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக டிரம்ப் கூறுகையில், ஹர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கச்சா எண்ணெய் கப்பல்களை தடுக்க ஈரான் ஏதேனும் முயற்சித்தால் அந்நாட்டின் மீது ஏற்கனவே நடத்திய தாக்குதலை விட 20 மடங்கு கூடுதல் தாக்குதலை அமெரிக்கா நடத்தும்.

ஈரானால் மீண்டும் கட்டமைக்க முடியாது எளிதான இலக்குகளை நாங்கள் அழிப்போம். மரணம், நெருப்பு மற்றும் கோபம் அவர்களை ஆட்சி செய்யும். ஆனால், இது எல்லாம் நடக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன்

இவ்வாறு அவர் கூறினார்.

# போரால் யாரும் பாதிக்கப்படக்கூடாது: பிரதமர் மோடிக்கு முதல்வர் கடிதம்



**சென்னை, மார்ச் 11:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

அமெரிக்கா – ஈரான் போரினால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இதுகுறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இன்று விரிவாக ஆய்வு செய்தேன். தற்போது பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும் அப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மீனவர்களின் நலனையும் உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்திட வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தப் போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும், தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளேன் என்று கூறியுள்ளார்.

# சிலிண்டர்கள் கையிருப்பு எவ்வளவு?: விவரம் அளிக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு உத்தரவு

**சென்னை, மார்ச் 11:**

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 100 டாலரை (இந்திய மதிப்பில் ரூ.9 ஆயிரத்து 235) தாண்டி விட்டது. ஈரான் போர் தொடங்கிய போது இருந்த விலையை விட 60 சதவீதத்துக்கு மேல் உயர்ந்து விட்டது. இதனால், இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயருமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு உயர்மட்ட வட்டாரங்கள் கூறுகையில், "சர்வதேச எண்ணெய் சந்தைகளை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. பெட்ரோல், டீசல் விலையை இப்போதைக்கு உயர்த்தும் திட்டம் இல்லை. விலை அழுத்தத்தை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் இப்போதைக்கு தாங்கிக் கொள்ளும். அடுத்த 6 முதல் 8 வாரங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயும்,பெட்ரோல், டீசலும் கையிருப்பில் உள்ளன. தடையற்ற விநியோகத்துக்கான முயற்சிகளை தீவிரப்படுத்தி உள்ளோம்.

இந்தியாவில் கடந்த 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து பெட்ரோல், டீசல் விலை மாற்றப்படவில்லை. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறையும்போது, எண்ணெய் நிறுவனங்கள் அதிக லாபம் ஈட்டிக்கொள்ளவும், சர்வதேச சந்தையில் விலை அதிகரிக்கும் போது நஷ்டத்தைதாங்கிக்கொள்ளவும் அனுமதிக்கும் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வருகிறது" என்று தெரிவித்திருந்தது.

மேலும், சமையல் கியாஸ் தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்க ஒரு சிலிண்டர் வைத்துள்ள குடும்பங்கள், முன்பதிவு செய்வதற்கான கால இடைவெளி 21 நாட்கள் என்று சமீபத்தில் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், அதை 25 நாட்கள் என்று மத்திய அரசு உயர்த்தி உள்ளது.



இதுபற்றி மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகையில், "இந்தியாவில், ஒரு குடும்பம் ஓராண்டுக்கு சராசரியாக7 அல்லது 8 சிலிண்டர்களை பயன்படுத்துகிறது. அதாவது, 6 வாரங்களுக்கு முன்பாக அடுத்த ' சிலிண்டர் வாங்கத் தேவையில்லை. எண்ணெய் நிறுவனங்களிடம் போதிய சமையல் கியாஸ் கையிருப்பு உள்ளது. இருப்பினும், சமையல் கியாஸ் சிலிண்டர்கள் பதுக்கப்படுவதையும், செயற்கையான தட்டுப்பாடு உருவாக்கப்படுவதையும் தடுக்க சமையல் கியாஸ் முன்பதிவு கால இடைவெளி அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தடையற்ற வினியோகத்துக்காக, சமையல் கியாஸ் உற்பத்தியை அதிகரிக்குமாறு சுத்திகரிப்பு நிறுவனங்களை கேட்டுக்கொண்டுள்ளோம்" என்று தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் கேஸ் சிலிண்டர்கள் கையிருப்பு எவ்வளவு உள்ளது..? தேவை எவ்வளவு..? என்பது குறித்து உடனடியாக (மார்ச் 10-ம் தேதி) மதியத்திற்குள் விவரம் அளிக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது. இஸ்ரேல் – ஈரான் போர் சூழலில் தட்டுப்பாடு உள்ளதாக கூறப்படும் நிலையில் தமிழ்நாடு அரசு இந்த உத்தரவை தெரிவித்துள்ளது. தலைமைச் செயலாளர் தலைமையில் (மார்ச் 9-ம் தேதி) நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சட்டசபை தேர்தல் பணி:உ.பி.யில் இருந்து சென்னைக்கு துணை ராணுவம் வருகை

**சென்னை, மார்ச் 11:**



தமிழகம் உள்பட 5 மாநிலங்களில் அடுத்த மாதம் (ஏப்ரல்) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தல் நடைபெறும் தேதி வரும் 15-ந் தேதி இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக, ஏப்ரல் மாதம் 23-ந் தேதி தமிழக சட்டசபை தேர்தல் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடனேயே தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும் என்பதால், தேர்தல் பணிக்கு துணை ராணுவப் படையினர் 5 மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், தமிழக தேர்தல் பணிக்கு உத்திரபிரதேசத்தில் இருந்து சிறப்பு ரெயில் மூலம் இன்று மதியம் சென்னை பெரம்பூருக்கு துணை ராணுவப் படையினர் வந்தடைந்தனர்.

11 கம்பெனியாக வந்துள்ள துணை ராணுவப்படையில், ஒவ்வொரு கம்பெனியிலும் 100 பேர் உள்ளனர். மொத்தம் 1100 பேர் சென்னை வந்துள்ளனர். அவர்கள் தனித்தனியாக வாகனங்களில் ஏற்றப்பட்டு, சென்னைக்கு 6 கம்பெனியினர் அனுப்பிவைக்கப்பட்டனர். கேரளாவுக்கு 5 கம்பெனியினர் செல்ல உள்ளனர். தேர்தல் பணிக்கு மேலும் துணை ராணுவப் படையினர் விரைவில் வருவார்கள் என்று கூறப்படுகிறது.

# கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் இந்தியாவின் விளையாட்டு தலைநகரம் தமிழகம்: தமிழக அரசு பெருமிதம்

**சென்னை, மார்ச் 11:**

திமுக அரசு சார்பில், 44-வது செஸ் ஒலிம்பியாட், சென்னை ஃபார்முலா-4 கார் பந்தயம், சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டு, உலகளவில் விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் தமிழகம் முக்கியமான விளையாட்டு களமாக மதிக்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் வீரர்களுக்கு பயிற்சிகள் பெற உதவித் தொகை, தங்கும் இடவசதி, போட்டிகளில் பங்கேற்க வெளி ஊர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுவரும் பயணச் செலவு, வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்குப் பரிசுகள், ஊக்கத்தொகைகள் அனைத்தும், போட்டிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

சிறந்த வெற்றிகளை ஈட்டி தமிழகத்துக்கும், மத்திய அரசுக்கும் புகழ் தேடித்தரும் வீரர், வீராங்கனைகளுக்கு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்களில் உயர் ஊதியத்துடன் பணி நியமனம் வழங்கப்படுகிறது. மூன்று சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் 5 ஆண்டுகளில் 70 மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 301 விளையாட்டு வீரர்கள் அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



அதே போல், சர்வதேச தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 6,689 வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.215.78 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை செம்மஞ்சேரியில் ரூ.261 கோடியில் உலகத் தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்கப்பட்டு வருகிறது. 234 தொகுதிகளிலும் தொகுதிக்கு ஒரு சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்து, 141 அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும், 12,831 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம், 'இந்தியாவின் விளையாட்டு தலைநகரம் தமிழகம்' என இன்று பெற்றுள்ள புகழ், நாளை 'உலகின் விளையாட்டுத்தலைநகரம் தமிழகம்' என்னும் பெருமையையும் புகழையும் ஈட்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# மெரினா கடற்கரையில் கல்விச்சிலை

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சென்னை, மார்ச் 11:** முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி பள்ளிக் கல்வித்துறை புதுமைகளை முன்னெடுத்துச் செல்லும் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை கல்வியில் திட்டமிடல், நிர்வாகம் மற்றும் கல்வி சார்ந்த கட்டமைப்புகளை தொடர்ந்து மேம்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது.மாணவர்களின் வளர்ச்சியை முன்னுரிமையாகக் கொண்டு, பள்ளிக் கல்வித்துறை பள்ளி கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.), ரோபோட்டிக்ஸ், நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள், திறன் வகுப்பறைகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வருகிறது.

மாணவர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், கணித உபகரணப் பெட்டிகள், மிதிவண்டிகள் வழங்கி மாணவர்களின் கல்வித்திறனை மேலும் வலுப்படுத்துகின்றன.

இந்தியாவிலேயே பள்ளிக் கல்வியில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறையின் வளர்ச்சியினை வெளிப்படுத்தும் விதமாக சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் சிலை அமைக்க திட்டமிடப்பட்டு, அதன்படி, ரூ.1 கோடியே 43 ஆயிரம் செலவில் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக அமைக்கப்பட்டுள்ள "கற்றனைத் தூறும் அறிவு" சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

# துபாயில் இந்தியர்கள் இலவசமாக தங்க அடுக்குமாடி குடியிருப்பை வழங்கிய தொழில் அதிபர்



**துபாய், மார்ச் 11:** மத்திய கிழக்கில் போர் காரணமாக விமான போக்குவரத்து பாதிப்படைந்து உள்ளது. துபாயில் விமான போக்குவரத்து பாதிப்பால் இந்தியர்கள் உள்பட பலர் நாடு திரும்ப முடியாமல் தவித்து வருகிறார்கள்.

இந்தியர்கள் தங்களது ஓட்டல் முன்பதிவு முடிந்து விட்டதால் அங்கு தங்க முடியாமல் தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் துபாயில் சிக்கி தவிக்கும் இந்தியர்களுக்கு இந்திய வம்சாவளி தொழில் அதிபர் ஒருவர் உதவி உள்ளார்.

துபாயில் மிசான் குழுமத்தின் தலைவரான இந்திய வம்சாவளியை சேர்ந்த யோகேஷ் தோஷி, துபாயில் சிக்கி தவிக்கும் இந்தியர்கள் இலவசமாக தங்கி கொள்ள தனது 64 குடியிருப்புகளை கொண்ட கட்டிடத்தை வழங்கி உள்ளார்.

உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் இந்த அடுக்குமாடி குடியிருப்பு இந்தியர்களுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக யோகேஷ் தோஷி கூறும் போது, அடுக்குமாடி குடியிருப்பை இலவசமாக வழங்கும் முயற்சி இந்திய மக்கள் மன்றம்-ஐக்கிய அரபு அமீரகம், துபாயில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

இது 125-க்கும் மேற்பட்ட இந்தியர்களுக்குத் தற்காலிகத் தங்குமிடம் கிடைக்க உதவியுள்ளது.

# திருப்பூரில் பனியன் பேக்கிங் நிறுவனத்தில் தீ விபத்து - பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதம்



**திருப்பூர், மார்ச் 11:** பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் தனஞ்ஜெயன். திருப்பூர் வளையங்காடு பகுதியில் குடியிருந்து வருகிறார். இவர் லட்சுமி நகர் பகுதியில் உள்ள 2 மாடி கட்டிடத்தின் 2-வது மாடியில் அயனிங் மற்றும் பேக்கிங் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இதில் 10-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் நேற்று இரவு வேலை முடிந்து நிறுவனமானது பூட்டப்பட்டு தொழிலாளர்கள் வீட்டிற்கு சென்றனர். நேற்று காலை நிறுவனத்தில் இருந்து கரும்புகை வெளியேறியது. பின்னர் சிறிது நேரத்தில் மளமளவென தீப்பிடித்து எரிந்தது.இதனைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வடக்கு தீயணைப்பு நிலைய வீரர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் நிறுவனத்தில் இருந்த ஏராளமான பின்னலாடைகள், காட்டன் பாக்ஸ்கள், பாலி பேக்குகள் உள்ளிட்ட பொருட்கள் தீயில் எரிந்து சேதம் அடைந்தது. அவற்றின் மதிப்பு பல லட்சம் இருக்கும்.

மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்ற கோணத்தில் திருப்பூர் வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பழனி மலைக்கோவிலில் பங்குனி உத்திர திருவிழா மார்ச்26-ந்தேதி தொடக்கம்



**பழனி, மார்ச் 11:** அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சாமி கோவிலில் கொண்டாடப்படும் முக்கிய திருவிழாக்களில் பங்குனி உத்திரமும் ஒன்றாகும். இவ்விழாவின் முக்கிய அம்சமே ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தம் எடுத்து வந்து முருகபெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவதுதான்.

இந்த வருடத்திற்கான திருவிழா வருகிற 26-ந்தேதி திருஆவினன்குடி கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. விழா நடைபெறும் 10 நாட்களும் வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமாரசாமி வெள்ளி காமதேனு, வெள்ளி ஆட்டு கிடா, வெள்ளியானை, தங்க குதிரை, தங்க மயில் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறும்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் மார்ச் 31-ந்தேதி நடைபெறும். அன்றைய தினம் இரவு வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமாரசாமிக்கு திருக்கல்யாணமும், இரவு 9 மணி அளவில் வெள்ளி ரதத்தில் மணக்கோலத்தில் சுவாமி சன்னதி வீதி, கிரி வீதிகளில் உலா வரும் நிகழ்ச்சி நடைபெறும்.

பங்குனி உத்திர திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் ஏப்ரல் 1-ந்தேதி நடைபெறுகிறது. அன்று மாலை 4.20 மணி அளவில் தேரோட்டம் நடைபெறும். ஏப்ரல் 4-ந்தேதி கொடி இறக்குதலுடன் திருவிழா நிறைவு பெறுகிறது. திருவிழா நடைபெறும் 10 நாட்களும் குடமுழுக்கு நினைவரங்கில் பக்தி சொற்பொழிவு, இன்னிசை, பரதநாட்டியம், நாதஸ்வர கச்சேரி, வீணை இன்னிசை, பொம்மலாட்டம், தேவராட்டம், சாக்ஷபோன் இசை நிகழ்ச்சி, நாட்டுப்புற பாடல்கள் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேஷ் தலைமையிலான அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

திருவிழா நடைபெறும் மார்ச் 30-ந்தேதி முதல் ஏப்ரல் 3-ந்தேதி வரை மலைக்கோவிலில் தங்க ரத புறப்பாடு நடைபெறாது என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30-ந்தேதி மட்டும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் தங்க ரத புறப்பாடு நடைபெற உள்ளது.

# விசாரணைக்கைதி உயிரிழந்த வழக்கு - மதுபான கடைகளை 3 நாட்கள் மூட ஆட்சியர் உத்தரவு




**சிவகங்கை, மார்ச் 11:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அரிவாள் வெட்டு சம்பவத்தில் கைதான கிருஷ்ண ராஜபுரத்தை சேர்ந்த ராஜேஷ் கண்ணன் என்பவரின் மகன் ஆகாஷ் டெலிசன் (வயது 27) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

முன்னதாக அவர் போலீசாரிடம் இருந்து தப்ப முயன்றபோது பாலத்தில் இருந்து விழுந்ததில் கால் முறிவு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர் மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி திடீரென ஆகாஷ் டெலிசன் இறந்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் ஆகாஷ் டெலிசன் சாவில் போலீசார் மீது சந்தேகம் இருப்பதாக குற்றச்சாட்டு தெரிவித்தனர். மேலும் மதுரை அரசு ஆஸ்பத்திரியில் அவரது உடலை வாங்க மறுத்து போராட்டம் நடத்தினர்.

இதற்கிடையில் ஆகாஷ் டெலிசன் சாவுக்கு காரணமான போலீசார் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிவாரண நிதி, அரசு வேலை ஆகியவற்றை வழங்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த 8-ந் தேதி மானாமதுரை பஸ் நிலையம் அருகே மதுரை-ராமேசுவரம் 4 வழிச்சாலையில் உறவினர்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

3-வது நாளான நேற்று காலையும் சாலைமறியல் தொடர்ந்தது. தங்களது கோரிக்கைகளை முழுவதுமாக நிறைவேற்றும் வரை போராட்டம் நடைபெறும் என அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் மானாமதுரை 4 வழிச்சாலையில் போக்குவரத்து முற்றிலும் தடைபட்டது. மதுரை, ராமேசுவரத்தில் இருந்து வந்த வாகனங்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டன. சுமார் 50 கிலோ மீட்டர் சுற்றிச்செல்லும் நிலை ஏற்பட்டது. பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருப்புவனத்தில் அரசு, தனியார் மதுபான கடைகள், பார்களை 3 நாட்கள் மூட மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

ஆகாஷ் டெலிசன் உயிரிழந்ததை தொடர்ந்து 3-வது நாளாக சாலைமறியல் போராட்டம் நடைபெறுவதால் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதி மதுபான கடைகள், பார்கள் 3 நாட்களுக்கு மூடுமாறு ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாடு: மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க இபிஎஸ் வலியுறுத்தல்



**சென்னை, மார்ச் 11:** மத்திய அரசு மக்களுக்கு தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும்

தமிழ்நாடு அரசு அம்மா உணவகங்களை மேலும் முழுவீச்சில் இயங்கவைத்து, எவ்வித தடையுமின்றி தொடர்ந்து உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிவரும் போர்ச்சூழல் காரணமாக இந்தியாவில் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் பல்வேறு உணவகங்கள், டீக்கடைகள் மூடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்த பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, உரிய நடவடிக்கைகளை எடுத்து, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை கோரியுள்ளார் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

மேலும் மாநில அரசும் இதில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ளப் பதிவில் கூறியுள்ளதாவது,

"ஈரான் - இஸ்ரேல், வளைகுடா நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக பெட்ரோலிய பொருட்களை இந்தியாவுக்கு கொண்டுவருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக வணிக மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகத்தைத் தற்காலிகமாக நிறுத்துவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது. LPG-க்கு மாற்றாக வேறு எரிபொருளை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே சில மாவட்டங்களில் சிலிண்டர்கள் கிடைக்காததால் உணவகங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, உரிய நடவடிக்கைகளை எடுத்து, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அதேபோல், மக்களிடையே இதை வைத்து தேவையற்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வேலைகளை விடுத்து, தமிழ்நாட்டில் உணவகங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான எரிவாயு ஏற்பாடுகள் மற்றும் சலுகைகளை பொறுப்புள்ள மாநில அரசாக செய்து தர வேண்டும் எனவும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அம்மா உணவகங்களை மேலும் முழுவீச்சில் இயங்கவைத்து, எவ்வித தடையுமின்றி தொடர்ந்து உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வருகிற 15-ந்தேதி சிபிஐ முன்பு ஆஜராகிறார் விஜய்: நிர்மல் குமார் தகவல்



**சென்னை, மார்ச் 11:** கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இவ்வழக்கு தொடர்பாக த.வெ.க தலைவர் விஜய் ஏற்கனவே 2 முறை டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

இதனை தொடர்ந்து, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக இன்று நேரில் ஆஜராகும் படி நேற்று த.வெ.க. தலைவர் விஜய்க்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பியது. அதனை தொடர்ந்து தேர்தல் பணிகள் காரணமாக விசாரணையில் இருந்து விலக்கு அளித்து சென்னையில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜராக அனுமதிக்க வேண்டும் என சிபிஐ-க்கு விஜய் கோரிக்கை விடுத்து இருந்தார்.

இந்த நிலையில், கரூர் வழக்கு விசாரணைக்காக வருகிற 15-ந்தேதி நேரில் ஆஜராகுமாறு விஜய்க்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பி உள்ளது. அன்றைய தினம் சி.பி.ஐ. விசாரணைக்கு த.வெ.க. தலைவர் விஜய் ஆஜராக உள்ளார் என்று த.வெ.க. இணை பொதுச்செயலாளர் நிர்மல் குமார் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற எங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. பா.ஜ.க.வுடன் மறைமுக பேச்சுவார்த்தை இல்லை. யூகங்களுக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை என்றார்.

# தவெகவிற்கான ஆதரவை வாபஸ் பெற்றது ஜனநாயக முஸ்லீம் மக்கள் கட்சி!

**சென்னை, மார்ச் 11:** திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

எம்.ஜி.ஆர் அதிமுக விஜய்க்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு தந்த ஆதரவை அதிகாரப்பூர்வமாக வாபஸ் பெற்றுள்ளது ஜனநாயக முஸ்லீம் மக்கள் கட்சி. தவெக-வின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக ஏற்பட்ட அதிருப்தி காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கட்சி தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அதிமுகவிற்கு ஆதரவளித்து வந்த ஜேஎம்எம்கே, கடந்தாண்டு முதல்முறையாக தேர்தலை சந்திக்க உள்ள விஜய்யின் தவெகவிற்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தது. இந்நிலையில் இந்த முடிவில் இருந்து விலகி, தற்போது திமுகவிற்கு ஆதரவளிக்க உள்ளதாகவும், தேர்தலில் போட்டியிட திமுகவிடம் வாய்ப்பு கேட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக பேசிய அக்கட்சியின் நிறுவனத் தலைவர் எம்.எஃப். தமீம்,

'கடந்த எட்டு மாதங்களாக தவெகவோடு பயணித்தோம். அவர்கள் செயல்பாடு சரியில்லாததால் ஆதரவை வாபஸ் பெற்றுள்ளோம். கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்க அறிவுறுத்தியும் விஜய் போகவில்லை. வரும் தேர்தலில் திமுக தலைமையிலான அணிக்கு ஆதரவு தர இருக்கிறோம். தேர்தலில் போட்டியிடவும் வாய்ப்பு கேட்டுள்ளோம்' என தெரிவித்துள்ளார்.

இக்கட்சி தனது ஆதரவை திரும்பிப் பெற்றாலும், தமிழ்நாடு முஸ்லீம் லீக், எம்.ஜி.ஆர். அதிமுக விஜய்க்கு ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# விஜய் பா.ஜ.க.-வின் "சி" டீம்: அமித் ஷாவின் ஸ்லீப்பர் செல்- அமைச்சர் ரகுபதி



**சென்னை, மார்ச் 11:** த.வெ.க. தலைமையில் 3-வது அணி உருவாகும் என்று கூறப்பட்ட நிலையில், அவர் (விஜய்) பாஜக பக்கம் செல்ல இருப்பதாகவும், இது தொடர்பாக பவன் கல்யாண் பேசி வருவதாகவும் செய்திகள் வருகிறதே?. இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன என்று அமைச்சர் ரகுபதியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ரகுபதி பதில் அளித்ததாவது:-

பவன் கல்யாண் பேசினாலும், தவன் கல்யாண் பேசினாலும் எங்களுக்கு கவலை இல்லை. எங்களை பொறுத்தவரை 3-வது அணி, 4-வது அணி வந்தாலும் நாங்கள் பலம் பொருந்திய அணியாகவும், நல்லது செய்கின்ற அணியாகவும், மக்கள் வரவேற்கும் அணியாகவும் எங்கள் அணி இருக்கிறது.


தேர்தல் அறிக்கையில் என்னென்ன முக்கியம்சங்கள் இடம் பெறும் என்பதை எங்கள் தலைவர் சொல்வார்.

விஜயை நாங்கள் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. அவர் ஒரு படத்திற்கு 200 கோடி ரூபாய் வாங்குகிறார் என்றால், பிளாக்கில் டிக்கெட் விற்றால்தான் வாங்க முடியும்.

விஜய் கட்சி மாற்றுக்கட்சியும் அல்ல. எந்தக் கட்சியும் அல்ல. அவர் விளம்பர கட்சிதான். விஜய் கட்சி பாஜக-வின் சி டீம். முதல் நாளில் இருந்தே இதைத்தான் நான் சொல்கிறேன். இன்னும் சொல்லப்போனால் அவர் அமித் ஷாவின் ஸ்லீப்பர் செல்.

இவ்வாறு ரகுபதி தெரிவித்தார்.

# நாங்குநேரியில் இரட்டை கொலை சம்பவம் தமிழ்நாடு அரசின் தோல்வியை காட்டுகிறது – ஷியாம் கிருஷ்ணசாமி



**களக்காடு, மார்ச் 11:** நாங்குநேரி அருகே பெரும்பத்தில் கடந்த 2-ந் தேதி இரவில் 9 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியதில் பலியான மாற்றுத்திறனாளி ஜான் குடும்பத்தினரை புதிய தமிழகம் கட்சி மாநில இளைஞரணி செயலாளர் ஷியாம் கிருஷ்ணசாமி இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

மேலும் அரிவாள் வெட்டில் காயமடைந்த பிரபாகரன், ராமசாமி ஆகியோரை சந்தித்து ஆறுதல் தெரிவித்து நடந்த சம்பவங்கள் பற்றி கேட்டறிந்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காவல்துறையில் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆதிக்கம் செலுத்துவது அதிகரித்துவிட்டது. அதனால் தான் இதுபோன்ற சம்பவங்கள் நடந்து வருகிறது. அஜித்குமாரும், ஆகாசும் இதனால்தான் போலீசாரால் அடித்து கொலை செய்யப்பட்டனர்.

கடந்த 4 ஆண்டுகளாக பட்டியல் இன மக்களின் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது. நாங்குநேரி சம்பவம் அரசின் தோல்வியை காட்டுகிறது. முதலமைச்சர் இதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை. அரசின் சார்பில் நிவாரணம் வழங்கவும் இதுவரை முன் வரவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.


























ADIYOGI
REAL ESTATE WHOLESALE
VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901







WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424













WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெவ்பர்,
வர/மாத சம்ப்ளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588




WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!




மறக்க நினைக்குறேன்
இருந்தும்
மறக்காமல் நினைக்கிறேன்

எல்லோருக்கும் அழகை
வர்ணிக்க
தானே கவிதை
தேவைப்படும்
எனக்கு மட்டும் கவிதையை
வர்ணிக்க நீ
தேவைப்படுகிறாய்

நின்று திரும்பிப்பார்க்க
விடவில்லை நாணம்
நீ நிழலாய்
பின்தொடர்கிறாய்
என தெரிந்தபின்பும்

மலையிடம் பேச
தென்றல்
மழையிடம் பேச
மின்னல்
மலரிடம் பேச
வண்டு
என் மனதிடம் பேச
நீ

# வாழ்க்கை தத்துவம்...



கண்ணாடி தான் என் சிறந்த நண்பர். ஏனெனில், நான் அழும்போது அது ஒருபோதும் சிரித்ததில்லை. - சார்லி சாப்ளின்.


உன் மனம் வலிக்கும்போது சிரி, பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்க வை. - சார்லி சாப்ளின்.

நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது, நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது, நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது. கன்ஃபூஷியஸ்.

நமக்கு நெருக்கமானோர் நம்முடன் பேசாதபோது ஏற்படும் வலியைவிட, அவர்கள் மற்றவருடன் நெருக்கமாக பேசும்போது ஏற்புடும் வலி அதிகம்.

கஷ்டப்படுறவன் கிட்ட சிரிப்பு இருக்காது, சிரிக்கிறவன் கிட்ட கஷ்டம் இருக்காது, ஆனால் கஷ்டத்திலும் சிரிக்கிறவன் கிட்ட தோல்வி இருக்காது.

# மனசாட்சி....



பறவைகளின்
குரலோசைக் கேட்டு
விழித்தேன் சன்னல் வழியே
பார்த்தேன் .

பள பளன்னு விடியல்
புலர்ந்து கொண்டிருக்க ,
படார்...டமார்...என
பாத்திரங்கள் உருளும்
சத்தம் கேட்டது.

காலையிலே என்னவள்
யாருடன் பொறிந்து
கொண்டிருந்தாலோ
தெரியலையே ....
பாத்திரங்கள் அடிப்பட்டு
கொண்டிருக்கிறது பின்
பாத்திரங்கள் நெளிழ்ந்து
போய் வடிவத்தின் அழகு
போய்விடுமே...
என எண்ணிக்
கொண்டே,பாயை மடக்கி
சுவரோமா சாத்தி வைத்து
விட்டு, போர்வையை மடித்து
கட்டிலில் மேல் வைத்து
விட்டு தலையணையை
அதன் மேல் வைத்து
மெதுவாக அடுக்கலைக்குள்
தலை நீட்டினேன்!

பாத்திரம் கழுவும்
தொட்டியில் குழாயைத்
திறந்து பாத்திரங்களை
கழுவிக் கொண்டிருந்தாள்
என் இல்லத்தரசி.

நான் "என்னம்மா
செய்றேன்னு" கேட்டேன்
என்னைத் திரும்பி புதிதாக
பார்ப்பது போல் பார்த்தவள்

"காபி போடப்போறேன்
உனக்கு வேணுமா" எனக்
கேட்டாள்

"காபி,டீ சாப்பிடாதே ன்னு
சொன்னாகேட்கிறியா..
எழுமிச்சை டீ போட்டுச்
சாப்பிட்டால் தலைவலி
குறையுமல்ல" என்று
சொல்லிக் கொண்டிருக்கும்
போதே,

இந்தக்காதில் வாங்கி
அந்தக் காதின் வழியாய்
விட்டுவிட்டு அவள் பாட்டுக்கு
பாத்திரத்தை கழுவி
எரிவாயு அடுப்பின் மேல்
வைத்து பாக்கெட் பாலை
ஊற்றிவிட்டு நகர்ந்து சென்று
விட்டாள்.

நான் அடுத்த எரிவாயு
அடுப்பில் ஒரு டம்ளர்
தண்ணீரை ஊற்றி
கொதிக்க வைத்தேன்
டீத்தூள் கொஞ்சம்
போட்டு நாட்டுச் சர்க்கரை
ஒரு சிறிய கரண்டியில்
எடுத்து போட்டு நன்றாக
கிளறி விட்டு வடிகட்டியை
எடுத்து குழாயில் கழுவிட
திரும்பினேன்.

அப்போது சொய்ய்ய் ன்னு
சத்தம் வந்தது திரும்பிப்
பார்த்தாள் என் இல்லத்தரசி
கோபத்தைப் போல் பால்
பொங்கி வழிந்து எரிந்து
கொண்டிருந்தது எரிவாயு
அணைந்தது

படக்கென்று எரிவாயுவை
நிறுத்தினேன், பொங்கிய
பால் அடுப்பின் மேல்,கீழ்
என பரவி இருந்தது, எனக்கு
வேணும் நான் பாட்டுக்கு
சேரில் இருக்காமல் புதுசா
எழுமிச்சை டீ போட
வந்தேன் பாரு நான்
அடுக்கலைக்குள் வரவும்,
அவள் தொலைக்காட்சி
பெட்டியில் பாட்டுக் கேட்க
போயிட்டா இப்போ போய்
கூப்பிட்டா

" நீ,இருக்கேன்னு
தானே போனேன்" னு
காலையிலேயே அர்ச்சனை
பண்ணத் தொடங்கி
விடுவாள் .

"இப்போ என்ன செய்யலாம்
யோசித்தேன்," பக்கத்தில்
கைபிடித் துணி இருந்ததை
எடுத்து எரிவாயு அடுப்பில்
சிந்திய பாலைத்
துடைத்தெடுத்தேன் ,
அடுப்புக் கீழ் சிந்திய
பாலையும் துடைத்தெடுத்து
விட்டு ,கொதித்து
கொண்டிருந்த டீயில்
எழுமிச்சையை பிழிந்து
விட்டு, கலக்கி ரெண்டு
டம்ளரில் பாதி பாதி வடிகட்டி
எடுத்துக் கொண்டு வந்தேன்
.

தொலைக்காட்சி பெட்டியில்
"நல்லவர்க்கெல்லாம்
சாட்சிகள் ரெண்டு ஒன்று
மனசாட்சி ரெண்டு
தெய்வத்தின் சாட்சியம் மா...
"என்ற பாட்டைப் பார்த்துக்
கொண்டிருந்தவளிடம் போய்

"அடுப்புல பால் வச்சுட்டு
வந்து இங்கே பாட்டைப்
பார்த்துக்கிட்டு இருக்கிற
"என்று சொல்லவும்
"அடப்பாவி.. முட்டாபய
மவனே...
நீ,இருக்கேன்னு தானே
வந்தேன் பாலை பொங்க
விட்டுட்டியா...."ன்னு
கத்தி திட்டுவாள்ன் னு
நினைச்சேன்
வேகமா எழுந்து
அடுப்பைப் பார்த்தாள்.
நான் வடிகட்டியை கழுவிக்
கொண்ருக்கும் போது
பால் பொங்கிருச்சு என்று
சொல்ல,
சரி சரி விடுங்க,என்று
சொல்லிக் கொண்டே
கட்டிலில் வந்து அமர்ந்தாள்

"இந்தா எழுமிச்சை டீ"
என்று டம்ளரை நீட்டினேன்
வாங்கி டம்ளரை ஊற்று
பார்த்துக் கொண்டே
குடிக்கத் தொடங்கினாள்.

எனக்கு ஆச்சரியம் தாங்கல
எரிமலை வெடிக்காமல்
அமைதியா இருக்கேன்னு
மனசுக்குள் எண்ணிக்
கொண்டு திரும்பினேன்,

"என்னங்க...இந்தாங்க
டம்ளரை கழுவி வச்சுடுங்க
"என்று சொல்லவும்
சரிம்மா...என்று எதுவும்
சொல்லாமல், அதிகாரம்
செய்தால் எந்த நேரத்தில்
எரிமலை வெடிக்கும்னு
சொல்ல முடியாது, என்று
டம்ளரை வாங்கி கழுவி
வைக்கச் சென்றேன்.

நல.ஞானபண்டிதன்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



டாக்டர்: காலையில என்னம்மா சப்பிட்ட?

பெண்: பர்கர், பீட்சா, சாண்ட்வெஜ் சாப்பிட்டேன்

டாக்டர்: இங்க பாருமா இது வாட்ஸப்போ, இன்ஸ்டகிராமோ இல்லை. இது ஹாஸ்பிடல். உண்மையை சொல்லு.

பெண்: சாரி டாக்டர்..பழைய சோறும் கருவாட்டு குழம்பும் சார்..



# தினம் ஒரு சமையல்




## புடலங்காய் கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சின்ன புடலங்காய் | -1 |
| சீரகம் | -1 ஸ்பூன் |
| பச்சைமிளகாய் | -1 |
| சின்னவெங்காயம் | - 4 |
| கருவேப்பிலை | -1 கொத்து |
| உப்பு | -தேவைக்கு |
| சமையல்எண்ணெய் | - தேவைக்கு |
| கடலைப்பருப்பு | -2 ஸ்பூன் |
| மஞ்சள்பொடி | -கால்ஸ்பூன் |

செய்முறை:



முதலில் புடலங்காய்,வெங்காயம் கட்பண்ணிக்கொள்ளவும். புடலங்காய், கடலைப்பருப்பை வேகவைக்கவும்.சிறிது மஞ்சள்பொடி சேர்த்துக்கொள்ளலாம். தேங்காய், சீரகம், பச்சைமிளகாய் எடுத்துவைக்கவும்.


மூன்றையும் அரைத்துக்கொள்ளவும். வேகவைத்த புடலங்காயுடன் அரைத்த விழுதைச்சேர்க்கவும்.

நன்கு கொதிக்கவிடவும்.பின் வேறுவாணலியில் எண்ணெய்ஊற்றி கடுகு, உளுந்தம்பருப்புதாளிக்கவும்.

அதில்கட் பண்ணிய வெங்காயம், கருவேப்பிலை சேர்க்கவும். பின்தேங்காய் சேர்த்துவேகவைத்த புடலங்காயுடன் வதக்கிய வெங்காயத்தைச் சேர்க்கவும்.

நல்ல கிரேலி பதம் வந்ததும் இறக்கிவிடவும். சாம்பார்சாதத்துக்கு நன்றாகஇருக்கும். இதை சாதத்துடன் பிசைந்துசாப்பிடலாம்.அருமையாகஇருக்கும்.செய்துபாருங்கள்.

# ரோசா பயன்கள்



ரோஜா மலர்கள் அழகு, வாசனை மட்டுமின்றி, சருமப் பொலிவு, மன அமைதி (அரோமாதெரபி), மற்றும் உடல்நல மேம்பாட்டிற்கு உதவுகின்றன. விட்டமின் C மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் நிறைந்த ரோஜா இதழ்கள், குல்கந்து தயாரிப்பு, வயிற்றுப்போக்கு கட்டுப்பாடு, சருமப் பராமரிப்பு (ரோஸ் வாட்டர்), வாய்ப்புண் குணமாகவும், ரத்தத்தை சுத்தப்படுத்தவும், மற்றும் செரிமானத்தை மேம்படுத்தவும் பரவலாகப் பயன்படுகின்றன.

ரோஜா இதழ்களின் முக்கியப் பயன்கள்:

சருமப் பராமரிப்பு: ரோஸ் வாட்டர் (ROSE WATER) சருமத்தை ஈரப்பதமாக்கவும், PH அளவை சமநிலைப்படுத்தவும், கரும்புள்ளிகளை குறைக்கவும், சருமத்தை பளபளப்பாக்கவும் உதவுகிறது.

குல்கந்து (GULKAND): ரோஜா இதழ்களை சர்க்கரை/ தேன் கலந்து தயாரிக்கப்படும் குல்கந்து, மலச்சிக்கலை நீக்கவும், உடலுக்கு குளிர்ச்சி தரவும், வாய்ப்புண் மற்றும் வயிற்று வெப்பத்தை குறைக்கவும் பயன்படுகிறது.

மன அழுத்தம் குறைத்தல்: ரோஜாவின் நறுமணம் மனதை அமைதிப்படுத்தி, மன அழுத்தத்தைக் குறைத்து நல்ல தூக்கத்தைத் தூண்டுகிறது.

மருத்துவ குணங்கள்: ரோஜா இதழ்கள் பசியின்மை, தொண்டை புண், இருமல் மற்றும் சுவாச நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றன. இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றன.

சமையல் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்: ரோஜா நீர் மற்றும் எண்ணெய், அழகுசாதனப் பொருட்கள், வாசனை திரவியங்கள் மற்றும் இனிப்பு வகைகளில் சுவை மற்றும் மணத்திற்காகச் சேர்க்கப்படுகின்றன.

ரோஜா இதழ்களை மென்று சாப்பிடுவது வாய் துர்நாற்றத்தைப் போக்கி, வாய்ப் புண்களைக் குணமாக்கும்.

# ரூ. 15 கோடி பட்ஜெட்டில் உருவான சர்வம் மாயா.. லாபம் எவ்வளவு தெரியுமா?



மலையாள சினிமாவில் தனக்கென்று தனி இடத்தை சம்பாதித்துள்ள நடிகர் நிவின் பாலி. பிரேமம் என்கிற ஒரே ஒரு படத்தின் மூலம் ஒட்டுமொத்த தென்னிந்திய ரசிகர்களின் மனதிலும் இடம்பிடித்தார்.

இவருக்கு எப்போது தரமான ஒரு படம் கம்பேக் ஆக அமையும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த நிலையில், சர்வம் மாயா மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்த இப்படத்தை அகில் சத்யன் இயக்கியிருந்தார்.

ரியா சுபு இப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். இப்படத்தில் பேயாக நடித்து இளைஞர்களின் மனதை கவர்ந்த இவருக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. இந்த நிலையில், ரூ. 15 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட சர்வம் மாயா படம், ரூ. 150 கோடி லாபம் கொடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்மூலம் மலையாள திரையுலகில் மாபெரும் சாதனையை இப்படம் படைத்துள்ளது.






ரெட் ஹாட் உடையில் யாஷிகா போஸ் கொடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் வெளியாகி வைரல் ஆகி இருக்கிறது. இதோ பாருங்க.

# வடிவேலுவை சமாளிக்க முடியல.. 16 படங்களை நிராகரித்த நடிகை சோனா! சொன்ன அதிர்ச்சி காரணம்




வடிவேலு நீண்ட காலமாக தமிழ் சினிமாவில் உச்ச காமெடியனாக இருந்தவர். கடந்த சில வருடங்களாக அவரை காமெடியாக பார்க்க முடியவில்லை என்கிற வருத்தத்தில் தான் அவரது ரசிகர்கள் இருக்கிறார்கள்.

குசேலன் படத்திற்கு பின் வடிவேலு உடன் தனக்கு நடிக்க ஏராளமான படங்கள் வந்தும் வேண்டாம் என மறுத்துவிட்டேன் என நடிகை சோனா தற்போது பேட்டியில் தெரிவித்து இருக்கிறார்.

குசேலன் படத்திற்கு பின் 16 படம் வடிவேலுவுடன் நடிக்க கேட்டார்கள்.

ஆள விடுங்கடா சாமி என கூறி ஒரு படம் கூட ஒப்புக்கொள்ளவில்லை. என்னால் அவரை சமாளிக்க முடியவில்லை. அதை ஓப்பனாக பேச விரும்பவில்லை.

சுய மரியாதை தான் ரொம்ப அவசியம் எனவும் சோனா கூறி இருக்கிறார்.

# அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில்...!!

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஐவர் மலை என்னும் ஊரில் அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் அமைந்துள்ளது.

திண்டுக்கல்லில் இருந்து சுமார் 77 கி.மீ தொலைவில் ஐவர் மலை என்னும் ஊர் உள்ளது. ஐவர் மலையில் இருந்து நடந்து செல்லும் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.


குழந்தை வேலப்பர் தோகை விரித்த மயிலின் கழுத்தை இடக்கையில் அணைத்தவாறும், வலக்கையை இடுப்பில் ஊன்றிய படியும், பாதத்தருகே சர்ப்பம் படம் எடுத்த நிலையிலும் அமைந்திருப்பது சிறப்பாகும். இந்த அமைப்புள்ள முருகனை 'மயூரப்பிரியன்" என்பர்.

இத்தோற்றத்தை அபிஷேகத்தின் போது மட்டும் தான் காண இயலும். அலங்காரத்தில் இத்தோற்றம் மறைந்து விடும். இக்கோயிலில் உள்ள முருகனின் திருவுருவம் வேறு எந்த கோயிலிலும் காணப்படாத திருவுருவமாகும். இத்திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

கோயில் வெளிப்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள நவகிரக மண்டபத்தில், நவகிரகங்கள் வட்ட வடிவில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் உட்பிரகாரத்தில் வடமேற்கு பகுதியில் கிழக்கு நோக்கியபடி விநாயகப்பெருமானும், தெற்கு நோக்கியபடி ஐம்பொன்னாலான நடராஜரும், சிவகாமி தாயாரும் அருள்பாலிக்கின்றனர். சிறிய கருவறையில் குழந்தை வேலப்பர் எழுந்தருளியுள்ளார். அர்த்த மண்டபத்தில் மயில் வாகனம் அமைந்துள்ளது.

இம்மலையில் திரௌபதி அம்மன் சன்னதி மற்றும் இடும்பன் சன்னதியும் அமைந்துள்ளது. முருகன் கோயிலின் எதிரே உள்ள வள்ளலார் ஜோதி மண்டபத்தை அடுத்து





ஒரு சுனை உள்ளது. அதற்கருகில் உள்ள மிகப்பெரிய பாறையின் உச்சியில் உச்சி பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இம்மலையின் மிக உயரமான பகுதி இதுவேயாகும். இக்கோயிலுக்கு செல்ல பாறை மீது படிகளை செதுக்கி உருவாக்கியுள்ளனர். இம்மலையின் அடிவாரத்தில் ஒரு சிறிய ஏரி உள்ளது.

அதன் அருகே பெரிய ஆலமரத்தடியில் பாதவிநாயகர் சன்னதி அமைந்துள்ளது. தைப்பூசம், கார்த்திகை தீபம், மகாசிவராத்திரி, அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை ஆகியவை இக்கோயிலில் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி இக்கோயிலில் முக்கிய திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. அனைத்து விதமான வேண்டுதல்களும் நிறைவேற இத்தல இறைவனை பிரார்த்தனை செய்கின்றனர். இக்கோயிலில் வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் இத்தல மூலவருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தும், வஸ்திரம் சாற்றியும் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

A s Govinda rajan
KODAMBAKKAM, CHENNAI

# தினம் ஒரு தலைவர்கள் இப்சூர் ரகுமான் சியோகார்வி வரலாறு





இப்சூர் ரகுமான் சியோகார்வி 1900 - 1962 ஆகஸ்ட் 2) ஓர் இந்திய இஸ்லாமிய அறிஞர் மற்றும் இந்திய சுதந்திர இயக்கத்தின் செயல்பாட்டாளர் ஆவார். இவர் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக 25 ஆண்டுகள் (1922-1947) போராடிநார். இதற்காக எட்டு ஆண்டுகள் தனது வாழ்வை சிறையில் கழித்தார். இவர் இந்தியாவைப் பிரிப்பதை கடுமையாக எதிர்த்தார். மேலும் 1952 முதல் 1962 வரை அம்ரோஹா (மக்களவைத் தொகுதி) யிலிருந்து இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றினார்.

பிறப்பு மற்றும் கல்வி

ரஹ்மான் 1900 ஆம் ஆண்டு பிறந்தார் (1318 இஸ்லாமிய ஆண்டு). இவரது குடும்பம் பிஜ்னோர் மாவட்டத்தில் உள்ள சியோகராவை சேர்ந்த ஜமீன்தார் குடும்பமாகும். சியோகரா ஒரு நகரகும். இது உத்தரப் பிரதேசம் மாநிலம் பிஜ்னூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவரது தந்தை ஹாஜி சம்சுதீன் போபால் மாநிலத்திலும் பின்னர் பிகானேர் மாநிலத்திலும் உதவி பொறியாளராக வேலை செய்தார். ரஹ்மான் ஆரம்பத்தில் வீட்டுப் பள்ளியில் கல்வி பயின்றார். பின்னர் முரதாபாத்தில் உள்ள மதரஸா சாஹியில் சேர்ந்தார்.

ரஹ்மான் தனது நிறைவு பாடமான தார்ஸ்-இ-நிஜாமியை மதரஸா ஃபைஸ்-இ-ஆம் யில் முடித்தார். அங்கு அப்துல் கபூர் சியோஹார்வி, அஹ்மத் சிஷ்டி மற்றும் சையித் அப்தாப் அலி ஆகியோரின் கீழ் இவர் படித்தார். பின்னர் 1922 ஆம் ஆண்டில், தாருல் உலூம் தேவ்பந்திற்கு குடிபெயர்ந்தார். அங்கு அன்வர் ஷா காஷ்மீரியின் கீழ் ஹதீத்தில் நிபுணத்துவம் பெற்றார் மற்றும் 1923 இல் (1342 இஸ்லாமிய ஆண்டு) பட்டம் பெற்றார்.

இலக்கியப் படைப்புகள்

அக்லக் அவுர் ஃபல்சாஃபா-இ-அக்லக்

ஆசாதி: புன்யாடி இன்சானி ஹக்

பாலாக்-இ-முபீன்

ஹுகுமத் கா தீனி தசவ்வூர்

ஃபார்ட் அவுர் இஜ்திமாயத்

இஸ்லாம் கா இக்தேசி நிஜாம்

கசாஸ் அல்-குர்ஆன்

குர்ஆனி உசூல்-இ-மாஷியாத்

ரசூல்-இ-கரீம்

சீரத்-இ-நப்வி கி ஸாருரத் வா அஹ்மியாத்

வக்த் கி காத்ர்-ஓ-கெய்மத்

இறப்பு

சியோஹார்வி புற்றுநோயால் 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 அன்று இறந்தார். இவரது இறுதி ஊர்வலத்திற்கு தாருல் உலூம் தேவ்பந்த்தின் முதல்வர் காரி முஹம்மது தயிப் தலைமை தாங்கினார். முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, அமைச்சர்கள் மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின் பல உறுப்பினர்கள் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்தனர். மேலும் இவரது இறுதி ஊர்வலத்திற்கு இரண்டு இலட்ச மக்கள் கூட்டம் கூட்டமாக கலந்துக்கொண்டனர். இவரது அடக்க தளம் புது தில்லியின் முன்ஹதியனில் அமைந்துள்ளது, அங்கு தான் ஷா வலியுல்லாஹ் தெஹ்லவியும் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். இவரது நினைவாக ஜித்தாவில் இவரது பெயரில் அகாடமி நிறுவப்பட்டுள்ளது.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை புதன்கிழமை 11.03.2026

# குஜராத்: தவறுதலாக கால்வாயில் வீசப்பட்ட ரூ.2 லட்சத்தை மீட்டுத் தந்த தீயணைப்பு வீரர்கள்



**சூரத், மார்ச் 11:**

குஜராத் மாநிலம் சூரத் நகரில், பூஜைப் பொருட்களுடன் தவறுதலாகக் கால்வாயில் வீசப்பட்ட ரூ.2 லட்சம் ரொக்கப் பணத்தை தீயணைப்பு வீரர்கள் துரிதமாகச் செயல்பட்டு மீட்டு கொடுத்த சம்பவம் சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது.

சூரத் நகரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் அண்மையில் தங்கள் இல்லத்தில் சிறப்புப் பூஜை நடத்தினர். பூஜை முடிந்தவுடன், வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட மலர்கள் மற்றும் இதரப் பொருட்களை ஒரு பையில் சேகரித்து பீரோவில் வைத்திருந்தனர். அதே பீரோவில் நான்கு கட்டுகளாக வைக்கப்பட்டிருந்த ரூ.2 லட்சம் ரொக்கப் பணப் பையும் (500 ரூபாய் நோட்டுகள்), கவனக்குறைவாக அந்தப் பூஜைப் பொருட்களுடன் கலந்துள்ளது.

இதனை அறியாத குடும்பத்தினர், பூஜைப் பொருட்களை நீர்நிலையில் கரைப்பதற்காக அருகில் உள்ள கால்வாய்க்கு எடுத்துச் சென்று வீசினர். வீட்டிற்கு வந்து பார்த்தபோது தான் பூஜைப் பொருட்களுடன் சேர்ந்து பணப் பையும் மாயமானது தெரிய வந்தது. அதிர்ச்சியடைந்த அவர்கள், உடனடியாகத் தீயணைப்புத் துறையினருக்குத் தகவல் அளித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த வீரர்கள், கால்வாயில் இறங்கித் தேடுதல் வேட்டை நடத்தி, பணப்பையை மீட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். இந்த மீட்புப் பணியின்போது இரண்டு வீரர்கள் லேசான காயமடைந்தனர். இக்கட்டான சூழலிலும் நேர்மையுடன் செயல்பட்ட தீயணைப்பு வீரர்களுக்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது.

# நேஷனல் ஹெரால்ட் வழக்கு: அமலாக்கத் துறை மனு மீது ஏப். 20 இல் விசாரணை



**புதுடெல்லி, மார்ச் 11:**

நேஷனல் ஹெரால்ட் வழக்கில் அமலாக்கத் துறையின் மனுவை ஏப்.20-ஆம் தேதி தில்லி உயர்நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.

நேஷனல் ஹெரால்ட் விவகாரத்தில் அமலாக்கத் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை தில்லி விசாரணை நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. இதுகுறித்து அந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 'நேஷனல் ஹெரால்ட் விவகாரம் தொடர்பாக சிபிஐ வழக்குப் பதிவு (எஃப்ஐஆர்) செய்யவில்லை. அவ்வாறு வழக்குப் பதிவு செய்வது பண முறைகேடு நடைபெற்றதா என்ற கோணத்தில் விசாரணை நடத்த வழிவகுக்கும்.

இதுபோல பதிவு செய்யப்பட்ட வழக்கை அடிப்படையாகக் கொள்ளாமல், தனிநபர் (பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி) அளித்த புகாரின் அடிப்படையில்தான் அமலாக்கத் துறை விசாரணை நடைபெற்றுள்ளது. எனவே, அதன் குற்றப்பத்திரிகையை சட்டப்படி ஏற்க முடியாது' என்று தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக தில்லி உயர்நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. இந்த மனு தொடர்பாக பதிலளிக்குமாறு காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோருக்கு ஏற்கெனவே உயர்நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்தது.

இந்த மனுவை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று அமலாக்கத் துறை தரப்பில் உயர்நீதிமன்றத்தில் திங்கள்கிழமை கோரிக்கை விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அந்த மனு மீதான விசாரணை ஏப். 20-ஆம் தேதி நடைபெறும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

# வளைகுடா நாடுகளில் 12-ம் வகுப்பு சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைப்பு

**புதுடெல்லி, மார்ச் 11:**

ஈரான் நாட்டுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கியதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈரானியர்கள் பலியாகி உள்ளனர். இதனால் மேற்காசியாவில் கடும் பதற்றம் காணப்படுகிறது.

இந்த மோதலை அடுத்து, வளைகுடா நாடுகளில் நடக்க இருந்த 10-ம் வகுப்புகளுக்கான சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன. இந்த நிலையில், 12-ம் வகுப்புக்கான சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு உள்ளன என தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே 12-ம் வகுப்புக்கு கடந்த 7-ந்தேதி நடக்க இருந்த தேர்வு ஒத்திவைக்கப்பட்டது. 7-ந்தேதி நிலைமையை பற்றி மறுஆய்வு செய்யப்படும். அதன்பின்னர் 9-ந்தேதி அன்று, அடுத்து நடைபெறவுள்ள தேர்வுபற்றிய அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 12-ந்தேதி முதல் 16-ந்தேதி வரையிலான 12-ம் வகுப்புகளுக்கான சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு உள்ளன. 16-ந்தேதி முதல் நடைபெற உள்ள மீதமுள்ள தேர்வுகள் தொடர்பாக முடிவுகள் எடுப்பதற்கு முன், 14-ந்தேதி நிலைமையை மறுஆய்வு செய்வோம் என தேர்வு துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# 40 லட்சம் பெண்களுக்கு தலா ரூ.9 ஆயிரம் நேரடி பண பரிமாற்றம்

**கவுகாத்தி, மார்ச் 11:**

அசாமில் நடப்பு ஆண்டில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அசாமில் முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா தலைமையில் பா.ஜ.க. ஆட்சி செய்து வருகிறது. இந்த நிலையில், மாநில அரசின் அருணோதய் சிறப்பு திட்டத்தின் கீழ் 4 மாதங்களுக்கு சேர்த்து, 40 லட்சம் பெண்களுக்கு அவர்களுக்கு வங்கி கணக்கிற்கு, தலா ரூ.9 ஆயிரம் வீதம் நேரடி பண பரிமாற்றம் செய்யப்படும் என அசாம் அரசு அறிவிப்பு வெளியிட்டது. பெண்களுக்கு அதிகாரமளித்தலின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா கூறினார். இதன்படி, மொத்தம் ரூ.3,600 கோடி இந்த திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின்படி நாளை மார்ச் 10-ந்தேதி ஒரே நாளில் இந்த பணம் 40 லட்சம் பயனாளிகளை சென்றடைய உள்ளது.

# டிஜிட்டல் கைது மோசடியில் சிக்கிய முன்னாள் நீதிபதி

**ஹைதராபாத், மார்ச் 11:**

தெலங்கானாவில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் டிஜிட்டல் கைது மோசடியில் சிக்கி ரூ.1 கோடிக்கு மேல் இழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தெலங்கானா போலீஸார் நேற்று கூறுகையில், "மல்காங்கிரியை சேர்ந்த 69 வயது, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவருடன் டிஜிட்டல் மோசடி நபர்கள் ஒரு வாரத்திற்கு முன் தொடர்பு கொண்டுள்ளனர். பெண்கள் கடத்தல் மற்ற பிற குற்றச்செயல்களில் அவரது செல்போன் எண்ணுக்கு தொடர்பு இருப்பதாக கூறி அவரை மிரட்டியுள்ளனர்.

இதையடுத்து அவர்கள் கூறிய வங்கிக் கணக்குகளுக்கு ரூ.1 கோடிக்கு மேல் அந்த நீதிபதி பரிமாற்றம் செய்துள்ளார். பிறகுதான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர் 3 நாட்களுக்கு காவல்துறையிடம் புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறோம்" என்று தெரிவித்தனர். சட்ட நடவடிக்கைகளை நன்கு அறிந்த ஒருவரே ஏமாறும் அளவுக்கு டிஜிட்டல் மோசடியில் தந்திரங்கள் பயன்படுத்தப்படுவதை இந்த சம்பவம் உணர்த்துகிறது. "பொதுவாக மோசடி நபர்களின் மிரட்டல்களுக்கு மக்கள் பயப்படுகின்றனர். இதுவே இந்த மோசடிகள் தொடர்வதற்கு காரணம்" என்றும் போலீஸார் கூறினர்.

# மாநிலங்களவை எம்.பி.க்களாக 7 மாநிலங்களில் 26 பேர் தேர்வு!



**புதுடெல்லி, மார்ச் 11:**

தேசியவாத காங்கிரஸ் (சரத்சந்திர பவார்) கட்சியின் தலைவர் சரத் பவார், மத்திய சமூகநீதித்துறை இணையமைச்சர் ராமதாஸ் அதாவலே உள்பட ஏழு மாநிலங்களிலிருந்து 26 பேர் மாநிலங்களவை எம்.பி.க்களாக போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் 10 மாநிலங்களில் காலியான 37 மாநிலங்களவை இடங்களில் போட்டியிடுவதற்கு 40 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதில் தமிழகத்தில் 6 பேர், மகாராஷ்டிரத்தில் 7 பேர், மேற்கு வங்கத்தில் 4 பேர், அஸ்ஸாமில் 3 பேர், தெலங்கானாவில் இருவர் என மொத்தம் 26 பேர் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து 37 இடங்களில் எஞ்சிய 11 இடங்களுக்கு மார்ச் 16-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த 11 இடங்களில் 5 இடங்கள் பிகாரில் உள்ளன. ஒடிஸாவில் 4 இடங்களும், ஹரியாணாவில் 2 இடங்களும் உள்ளன. இந்தத் தேர்தலில் பிகாரின் நீண்ட கால முதல்வரான நிதீஷ் குமார், பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் ஆகியோர் மாநிலங்களவை எம்.பி.க்களாக தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளது. பிகாரில் 20 ஆண்டுகளாக முதல்வர் பதவியில் உள்ள நிதீஷ் குமார், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக கடந்த வாரம் அறிவித்தார். பிகாரில் உள்ள இடங்களில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நிதீஷ் குமார், மத்திய விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாக்குர், ராஷ்ட்ரீய லோக் மோர்ச்சா தலைவர் உபேந்திர குஷ்வாஹா, பாஜக மாநில பொதுச் செயலர் ஷிவேஷ் குமார் ஆகியோர் போட்டியிடுகின்றனர். ராஷ்ட்ரீய ஜனதா தளம் சார்பில் அமரேந்திர தாரி சிங் மீண்டும் போட்டியிடுவதால், அங்கு ஒரு மாநிலங்களவை இடத்துக்கு போட்டி இருக்கும் என்று கருதப்படுகிறது. இதேபோல ஒடிஸா மற்றும் ஹரியாணாவில் தலா ஓரிடத்தில் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 'பெண்கள் ஆண்களை விட புத்திசாலிகள், தொலைநோக்குடன் சிந்திப்பார்கள்' - ராகுல் காந்தி


**திருவனந்தபுரம், மார்ச் 11:**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி சமீபத்தில் கேரளாவில் மாணவிகளுடன் நடத்திய உரையாடலின் வீடியோவை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். அதில் ராகுல் காந்தி கூறியிருப்பதாவது:-

"நான் பெண்கள் தலைமை தாங்கிய குடும்பத்தில் வளர்ந்தவன். என் குடும்பத்தின் தலைவர் என் பாட்டி. என் குடும்பத்தில் எப்போதும் பெண்கள் தான் அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள். பொதுவாக, பெண்கள் ஆண்களை விட புத்திசாலிகள். ஆண்கள் அவசரக்காரர்கள். பெண்கள் தொலைநோக்குடன் சிந்திப்பார்கள். அவர்கள் நேரடி அதிகாரத்துக்கு பதிலாக, மறைமுக அதிகாரத்தை பயன்படுத்துவார்கள். அது பயனுள்ளதாக இருக்கும்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பொதுச்செயலாளர் பிரியங்கா ஆகியோரும் மகளிர் தின வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

# தமிழ்நாட்டைப் பின்பற்றி புதுச்சேரியிலும் குடும்ப தலைவிகளுக்கு ரூ.5,000 வரவு வைப்பு




**புதுச்சேரி, மார்ச் 11:**

தமிழக அரசு சமீபத்தில் மகளிர் உரிமைத்தொகை மற்றும் கோடைக்கால நிவாரணமாக ரூ. 5,000 வழங்கியிருந்தது. அதேபோல் புதுச்சேரியிலும் வழங்க வேண்டும் என மக்கள் எதிர்பார்த்து அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதனைப் பூர்த்தி செய்யும் வகையில், முதல்-மந்திரி ரங்கசாமி கவர்னருக்கு கோரிக்கை வைத்தார். அவரின் கோரிக்கையை ஏற்று ஆளுநர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அதில்,

சிவப்பு நிற குடும்ப அட்டைகளுக்கு மார்ச், ஏப்ரல் என இரு மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,500 உதவித் தொகையை சேர்த்து மொத்தமாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடி பணப் பரிமாற்றம் மூலம் செலுத்தப்படும். எந்தத் தடங்கலும் இன்றி, இடைத்தரகர்கள் தலையீடு இல்லாமல் நேரடியாகப் பெண்கள் தங்கள் தேவைகளுக்காக இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதுச்சேரியில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள மாதாந்திர நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கு ரூ. 2,500 வழங்கப்படுகிறது. தற்போது தேர்தல் வரவுள்ளதால், அடுத்த இரண்டு மாதங்கள், அதாவது மார்ச் மற்றும் ஏப்ரல் தொகையைச் சேர்த்து மொத்தம் ரூ. 5,000 ஆக ஒரே தவணையில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 63,000 குடும்பத் தலைவிகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவார்கள்.

# 'சர்வதேச கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பால் இந்தியாவில் விலைவாசி உயரவில்லை'



**புதுடெல்லி, மார்ச் 11:**

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும், இந்தியாவின் பணவீக்கம் கட்டுக்குள்தான் உள்ளது. எனவே, அத்தியாவசியப் பொருள்களின் விலையில் எந்தத் தாக்கமும் ஏற்படாது என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மக்களவையில் திங்கள்கிழமை இது தொடர்பான கேள்விக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

கடந்த ஓராண்டாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்துதான் வந்துள்ளது. ஆனால், கடந்த மாத இறுதியில் மேற்காசியாவில் மோதல் தொடங்கியதால் விலை உயர்ந்தது. இந்தியாவில் பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது. எனவே, தற்போதைய கச்சா எண்ணெய் விலை உயர்வு அத்தியாவசியப் பொருள்களின் விலையில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு, கச்சா எண்ணெய் தேவையில் ஏற்படும் மாற்றம், கச்சா எண்ணெய்யை கொண்டுவருவதில் ஏற்படும் தடைகள், நிதிக் கொள்கை மாற்றங்கள் எனப் பல விஷயங்கள் நீண்டகாலத்தில் கச்சா எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நுகர்வோர் விலை அடிப்படையிலான பணவீக்கம் கடந்த இரு ஆண்டுகளாக குறைந்தே வந்துள்ளது. விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க அரசு பல தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதில், அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பை அதிகரிப்பது, அரசு கையிருப்பு தானியங்களை பொதுச்சந்தையில் விற்பனைக்கு கொண்டு வருவது, தேவை ஏற்படும்போது இறக்குமதியை அதிகரிப்பது, ஏற்றுமதியை கட்டுப்படுத்துவது, அரசின் பாரத் பிராண்ட் பெயரில் மானிய விலையில் மக்களுக்கு பொருள்களை விற்பனை செய்வது, காய்கறி, வேளாண் பொருள் சந்தையில் அரசு தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வது, எரிபொருள் வரி குறைப்பு, வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கான சேமிப்பு வசதிகளை அதிகரிப்பது உள்ளிட்டவை அடங்கும்.

இது தவிர மக்கள் தங்கள் வருமானத்தை முழுமையாகப் பயன்படுத்த வசதியாக வருமான வரி விலக்கு வரம்பு ரூ.₹12 லட்சம் வரை (சம்பளதாரருக்கு ரூ.12.75 லட்சம் நிலையான கழிவுடன்) உயர்த்தப்பட்டுள்ளது. சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) தேவைக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்

# மும்பையில் இசை சாலையால் ஏற்பட்ட சிக்கல் : அமைதியை சீர்குலைப்பதாக பொதுமக்கள் புகார்

**மும்பை, மார்ச் 11:**

மும்பை ஒர்லியில் இருந்து நரிமன் பாயிண்ட் வரையில் செல்லும் கடற்கரை சாலையில் வாகன ஓட்டிகளின் சோர்வை தவிர்க்கவும், பாதுகாப்பான வேகத்தை உறுதிப்படுத்தவும் 'ஜெய் ஹோ' பாடல் இசைக்கும் வகையில் ரூ.6 கோடி செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 'இசை சாலை' கடந்த மாதம் திறக்கப்பட்டது. வாகனங்கள் மணிக்கு 60 முதல் 70 கி.மீ வேகத்தில் செல்லும்போது மட்டுமே இந்த இசை ஒலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதே இசை சாலை ஜப்பான், ஹங்கேரி, தென்கொரியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற வெளிநாடுகளில் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த இசை சாலை அமைந்துள்ள பிரீச் கேண்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், இதிலிருந்து வெளிவரும் சத்தம் தங்களுக்கு பெரும் தொந்தரவாக இருப்பதாக புகார் தெரிவித்துள்ளனர். இந்த தொடர் இரைச்சலால் அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் முதியவர்கள், நோயாளிகள் மற்றும் குழந்தைகள் தூக்கமின்மையால் அவதிப்படுவதாக கூறியுள்ளனர். இதையடுத்து மாநகராட்சி கமிஷனர், அந்த பகுதியில் ஒலியின் அளவை ஆய்வு செய்ய நிபுணர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கச்சா எண்ணெய் விலை 130 டாலரை தாண்டாத வரை பெட்ரோல், டீசல் விலை உயராது: அரசு வட்டாரங்கள்

**புதுடெல்லி, மார்ச் 11:**

கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 130 அமெரிக்க டாலரை தாண்டாத வரை இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்பில்லை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, ஒரு பேரலின் விலை 120 டாலரை எட்டி உள்ளது கவனிக்கத்தக்கது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு வட்டாரங்கள் கூறியது: இந்தியாவில் போதுமான அளவு இருப்பு இருப்பதால் எரிபொருள் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை. கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 100 அமெரிக்க டாலர்களை எட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது 130 அமெரிக்க டாலரை எட்டாத வரை இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்பில்லை. நாட்டின் எந்த பங்கிலும் பெட்ரோல், டீசல் பற்றாக்குறை பிரச்சினை இல்லை. ஈரானின் ஹார்முஸ் ஜலசந்தி பாதையைத் தவிர வேறு இடங்களில் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் போதுமான அளவு விமான எரிபொருள் (AVIATION TURBINE FUEL-ATF) இருப்பு உள்ளது. இந்தியா ATF உற்பத்தியாளராகவும் ஏற்றுமதியாளராகவும் உள்ளது. எனவே, ATF குறித்து பீதி அடையத் தேவையில்லை. மற்ற நாடுகளைவிட இந்தியா சிறந்த நிலையில் உள்ளது.

மக்கள் 55 நாட்களுக்கு முன்பாகவே எல்பிஜி சிலிண்டரை முன்பதிவு செய்யும் காலம் இருந்தது. அது 15 நாட்களாக குறைந்த சம்பவங்களும் இருந்தன. எல்பிஜி எரிவாயு முன்பதிவு காலம் 21 நாட்களில் இருந்து 25 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தைப்படுத்தலைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு: பெங்களூருவில் ஓட்டல்கள் வேலை நிறுத்தம்

**பெங்களூரு, மார்ச் 11:**

ஈரான் மீதான அமெரிக்கா-இஸ்ரேல் நாடுகளின் தாக்குதல் நீடித்து வருகிறது. இதனால் அரபு நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வரத்து தடைபட்டுள்ளது. இந்தநிலையில் பெங்களூருவில் வணிக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகம் திடீரென நிறுத்தப்பட்டு உள்ளன. இதனால் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் கர்நாடகா மாநிலம் பெங்களூரு மாநகரில் (செவ்வாய்க்கிழமை) முதல் ஓட்டல்கள் வேலை நிறுத்தம் தொடங்குவதாக பெங்களூரு மாநகர ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.




## திருவள்ளூர், செங்குன்றம் பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தவர் 5 பேர் கைது

**திருவள்ளூர், மார்ச்.11:** சட்டவிரோதமாக வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள், திருவள்ளூர், செங்குன்றத்தில் தங்கியிருப்பதாக தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு நேற்று தகவல் கிடைத்தது.

இதையடுத்து, சென்னை தீவிரவாத தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் அருண்பாண்டியன் உள்ளிட்ட போலீஸார் நேற்று அதிகாலை திருவள்ளூர் அருகே வேப்பம்பட்டு, செங்குன்றம் அருகே உள்ள கிராண்ட்லைன்- செல்வவிநாயகர் நகர் ஆகிய பகுதிகளில் வீடு, வீடாகச் சென்று சோதனை மேற்கொண்டனர்.

அதில் வேப்பம்பட்டு பகுதியில் வங்க தேசத்தைச் சேர்ந்த வாஸிம் அக்ரம் (24). எம்டி மசரூல்(20) கடந்த சில மாதங்களாக உரிய அனுமதியின்றி, கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வந்ததும், அவர்கள் உரிய அனுமதியின்றி பெங்களூரு மற்றும் சென்னையில் ஏற்கெனவே பணிபுரிந்து வந்ததும் தெரிந்தது.

அதே போல். கிராண்ட்லைன் செல்வவிநாயகர் நகர் பகுதியில் வங்கதேசத்தைச் சேர்ந்த ஜோரூல் இஸ்லாமோ (36), சஹால் இஸ்லாம் (26), ஹேரல் இஸ்லாம்(31) ஆகியோர் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக உரிய அனுமதியின்றி, சட்டவிரோதமாக தங்கி, கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வந்தது தெரிந்தது.

இதையடுத்து, வாஸிம் அக்ரம், ஜோரூல் இஸ்லாமோ உள்ளிட்ட 5 பேரை தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸார், செவ்வாப்பேட்டை மற்றும் செங்குன்றம் காவல் நிலையங்களில் ஒப்படைத்தனர்.

இதுகுறித்து, வழக்குப் பதிவு செய்த செவ்வாப்பேட்டை மற்றும் செங்குன்றம் போலீஸார், வாஸிம் அக்ரம் உள்ளிட்ட 5 பேரை நேற்று கைது செய்து, திருவள்ளூர், பொன்னேரி ஜே.எம். நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தி, சென்னை, புழல் சிறையில் அடைத்தனர்.

## ஒசூரில் விவசாய நிலங்கள் கையகப்படுத்துவதை நிறுத்தக் கோரி மனு கொடுக்க சென்ற விவசாயிகள் கைது

**சென்னை, மார்ச்.11:** ஒசூர் பன்னாட்டு விமான நிலையம், அறிவுசார் வழித்தடம், சிப்காட் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல திட்டங்களுக்காக, விவசாய நிலங்களை கையகப்படுத்துவதற்கு ஒசூரை சேர்ந்த நமது நிலம் நமதே விவசாயிகள் நலச் சங்கம் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

விளைநிலங்களை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தவும், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விவரிக்க சென்னையில் நேற்று பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

அதற்கு முன்னதாக முக்கிய அரசியல் கட்சிகளை சந்தித்து மனு கொடுக்க திட்டமிட்டனர். அதன்படி சங்கத்தின் மாநில தலைவர் குமார ரவிக்குமார் தலைமையில் 67 பேர் திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் சென்றனர்.

ஆனால் அதிகப்படியான கூட்டம் வந்ததால் போலீஸார் அவர்களை கைது செய்தனர். இந்நிலையில், கைது செய்யப்பட்ட குமார ரவிக்குமார் கூறுகையில், “ கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வட்டத்தில் உள்ள தசப்பள்ளி, கருப்பள்ளி, நந்தி மங்கலம் உள்ளிட்ட கிராமங்கள் அதனைச் சுற்றியுள்ள குக்கிராமங்களில் உள்ள வளமான விளைநிலங்கள், எங்களது வருமானத்துக்கான ஒரே ஆதாரமாகவும் விளங்குகிறது.

பெரிய அளவிலான தொழில் திட்டங்களிலிருந்து இந்த வளமான விளைநிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. இதை வலியுறுத்தி மனு கொடுக்க சென்றபோது போலீஸார் எங்களை கைது செய்தனர்” என்றார்.

## திருமணம் செய்து வைக்க முடியாத விரக்தியில் கிணற்றில் குதித்து தந்தை இறந்ததால் துக்கத்தில் மகள் தற்கொலை

**சென்னை, மார்ச்.11:** சென்னை வடபழனி கங்கையம்மன் கோயில், 1-வது தெருவில் வசித்தவர் கிருஷ்ணகுமார் (57). ஆட்டோ ஓட்டுநரான இவருக்கு 2 மகள்கள். மூத்த மகள் பிருந்தா திருமணமாகி கணவருடன் அம்பத்தூரில் வசிக்கிறார். 2-வது மகள் பாக்கியா (30).

திருமணம் ஆகாமல் தாய், தந்தையுடன் வசித்து வந்தார். இந்நிலையில் இளைய மகள் பாக்கியாவுக்கு 30 வயதாகியும் திருமணம் ஆகாததால் தந்தை கிருஷ்ணகுமார் மன உளைச்சலில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 7-ம் தேதி வீட்டிலிருந்து வெளியே சென்ற கிருஷ்ணகுமார் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதையடுத்து மனைவியும், மகளும் அவரை தேடினர். எங்கு தேடியும் அவரை கண்டுபிடிக்க முடியாமல் இருவரும் வீடு திரும்பினர்.

மறுநாள் கிருஷ்ணகுமாரின் மனைவி, வீட்டுக்கு பின்புறம் பாழடைந்த கிணற்றின் மீது கிருஷ்ணகுமாரின் செல்போன் இருப்பதைக் கண்டு தன் மகளிடம் தெரிவித்துள்ளார்.

உடனே மகள் பாக்கியா ஓடிவந்து பார்த்தபோது கிணற்றில் தந்தை உடல் மிதப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து, அம்மாவை வீட்டுக்குள் அழைத்துச் சென்று அவரை அறையில் வைத்து பூட்டிவிட்டு சமையலறைக்குச் சென்று தூக்கில் தொங்கினார்.

இதை சற்றும் எதிர்பாராத பாக்கியாவின் தாய், உடனே தனது மூத்த மகள் பிருந்தாவுக்கு போன் செய்து நடந்தவற்றைத் தெரிவித்தார். இதையடுத்து, அவர் தனது கணவருடன் தாய் வீட்டுக்கு விரைந்தார்.

அறையில் பூட்டி வைக்கப்பட்ட தாயை மீட்டதோடு, தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த பாக்கியாவையும் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். பரிசோதித்த மருத்துவர்கள் பாக்கியா ஏற்கெனவே இறந்துவிட்டதாக கூறினர்.

கிணற்றில் மிதந்த கிருஷ்ண குமார் உடலை தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் வடபழனி போலீஸார் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

முதற்கட்ட விசாரணையில் மகளுக்கு 30 வயது ஆகியும் இதுவரை திருமணம் செய்துவைக்க முடியாததால் தந்தை கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டதும், தந்தை இறந்த துக்கம் தாங்க முடியாமல் மகளும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதும் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

## ரயில்களில் காணாமல் போன ரூ.62.91 லட்சம் மதிப்புள்ள 205 செல்போன்கள் பயணிகளிடம் ஒப்படைப்பு



**சென்னை, மார்ச்.11:** ரயில் பயணிகளிடம் காணாமல் போன ரூ.62.91 லட்சம் மதிப்புள்ள 205 செல்போன்களை, ரயில்வே பாதுகாப்பு படை ஒப்படைத்துள்ளது. மத்திய தொலை தொடர்பு துறையில், ரயில்வே பாதுகாப்பு படைக்கு (ஆர்பிஎஃப்) சில அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரயில்களில் காணாமல் போகும் பயணிகளின் செல்போன்களை உடனுக்குடன் மீட்டு, ஒப்படைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பயணிகளிடம் திருடு அல்லது காணாமல் போன செல்போன்கள் குறித்து, ரயில்வே பாதுகாப்பு படை உரிய புகார்களை பெறும்.

இதையடுத்து, சென்ட்ரல் எக்யுப்மென்ட் ஐடென்டிட்டி ரிஜிஸ்டர் என்ற சிஇஐஆர் செயலியில், ரயில்வே பாதுகாப்பு படையினர் ஒருங்கிணைந்து செயல்பட்டு, காணாமல் போன செல்போன்களை மீட்டு பயணிகளிடம் ஒப்படைத்து வருகின்றனர்.

சென்னையில் திருடுபோன செல்போன்கள் புதுடெல்லி, ராஜஸ்தான் மேற்கு வங்கம், தெலங்கானா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், சமீபத்தில் மீட்கப்பட்ட 8 செல்போன்களை சம்பந்தப்பட்ட பயணிகளிடம், தெற்கு ரயில்வே ஆர்பிஎஃப் ஐஜி அருள்ஜோதி சென்னையில் நேற்று வழங்கினார். அதன்படி, கடந்த ஏப்ரல் முதல் தற்போது வரையில், ரூ.62.91 லட்சம் மதிப்புள்ள 205 செல்போன்கள் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பெருங்குடி, எஸ்ஆர்பி டூல்ஸ் சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்க சென்னை மெட்ரோ ரயில் ஒப்பந்தம்



**சென்னை, மார்ச்.11:** பெருங்குடி மற்றும் எஸ்ஆர்பி டூல்ஸ் சந்திப்புகளில் ரூ.113.80 கோடியில் மேம்பாலம் அமைக்க, தனியார் நிறுவனத்துக்கு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஒப்பந்தம் வழங்கியுள்ளது. இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஓஎம்ஆர் சாலை பகுதியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொண்டு வரும் மேம்பால மெட்ரோ ரயில் பணிகள் மற்றும் திட்ட அமலாக்கத்தில் தேவைப்படும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த மேம்பாலங்களை அமைக்கும் பணியை மாநில நெடுஞ்சாலைத் துறை, வைப்புத்தொகை அடிப்படையில் மெட்ரோ நிறுவனத் திடம் ஒப்படைத்துள்ளது.

அதன்படி, பெருங்குடி மற்றும் எஸ்ஆர்பி டூல்ஸ் சந்திப்புகளில் ரூ.113.80 கோடியில் மேம்பாலம் அமைக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், எம்.ராஜ்குமார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கியுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் சித்திக் முன்னிலையில், சென்னை மெட்ரோ நிறுவன திட்ட இயக்குநர் அர்ச்சுனன், எம்.ராஜ்குமார் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.ராஜ்குமார் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பணி தொடங்கிய நாளில் இருந்து 18 மாதங்களுக்குள், முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

பெருங்குடி சந்திப்பில் அமையவுள்ள இந்த மேம்பாலமானது, எம்ஜிஆர் பிரதான சாலையிலில் இருந்து ஒருபிரத்யேகசாய்வுப்பாதையை கொண்டிருக்கும். இது சோழிங்கநல்லூர் நோக்கிச் செல்லும் வாகனங்கள் தடையின்றி வலதுபுறம் திரும்புவதற்கு வழிவகை செய்யும்.

அதேபோல, எஸ்ஆர்பி டூல்ஸ் சந்திப்பில் அமையவுள்ள இந்த மேம்பாலம், ஓஎம்ஆரில் இருந்து வேளச்சேரி - தரமணி இணைப்புச் சாலையை நோக்கிச் செல்லும் வாகனங்கள் எவ்விதத் தடையுமின்றி வலதுபுறம் திரும்புவதற்கு வழிவகை செய்யும். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## எழும்பூர் நிலையத்தில் நவீன அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிக்க மின் ஏலம்: சென்னை ரயில்வே கோட்டம் அறிவிப்பு




**சென்னை, மார்ச்.11:** எழும்பூர் ரயில் நிலைய வளாகத்தில், நவீன அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கும், இயக்குவதற்குமான மின் ஏல அறிவிப்பை சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்டுள்ளது.

எழும்பூர் ரயில் நிலையத்தின் மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பயணிகளின் வசதிக்காக இரண்டு பிரம்மாண்டமான பல்நோக்கு வணிக வளாக கட்டிடங்கள்கட்டப்பட்டுள்ளன.

காந்தி - இர்வின் சாலை மற்றும் பூந்தமல்லி சாலை ஆகிய இரு புறங்களிலும் அமைந்துள்ள இந்தக் கட்டிடங்களில் வணிக அங்காடிகள் மற்றும் நவீன அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தற்போது, காந்தி-இர்வின் சாலைப் பகுதியில் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தின் 2-வது, 3-வது மற்றும் 4-வது தளங்களில் வாகன நிறுத்துமிட வசதிகள் முழுமையாகத் தயார் நிலையில் உள்ளன.

இந்த நவீன வாகன நிறுத்துமிடத்தை நிர்வகிப்பதற்கும், இயக்குவதற்கும் தகுதியான நிறுவனங்களைத் தேர்வு செய்ய மின் ஏலம் மூலமாக விண்ணப்பங்களை வரவேற்கிறது.

ஒப்பந்தத்தைப் பெறும் நிறுவனம், வாகனங்களின் நுழைவு மற்றும் வெளியேற்றத்தை முறைப்படுத்துதல், வாகனங்களை வரிசையாக நிறுத்துவதை உறுதி செய்தல் மற்றும் அப்பகுதியைத் தூய்மையாகப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஏல நடைமுறை அதிக அளவிலான நிறுவனங்கள் பங்கேற்பதை உறுதி செய்யவும் மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பேணவும் ‘இ-ஏல’ (e-auction) முறையில் நடைபெறவுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தகுதியுள்ள அதிகபட்ச ஏலத்தொகை கோரும் விண்ணப்பதாரருக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்படும்.

இந்த ஏல நடைமுறை, முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் www.ireps.gov.in என்ற இணையதளம் வாயிலாக மார்ச் 20-ம் தேதி மாலை 03.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இது குறித்த விரிவான விவரங்கள் மற்றும் தகுதி வரம்புகளை மேற்கண்ட இணையதளத்தில் அல்லது கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகம், வணிகப் பிரிவு, 2-வது தளம், என்ஜிஒ அனெக்ஸ், பார்க் டவுன், சென்னை - 600003 என்ற முகவரியில் நேரில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம்.

## அதிமுக எம்.பி. தம்பிதுரைக்கு சொந்தமான கல்வி நிறுவனங்கள் ஆக்கிரமித்துள்ள புறம்போக்கு நிலங்களை மீட்க ஐகோர்ட் கெடு

**சென்னை, மார்ச்.11:** அதிமுக எம்.பி. தம்பிதுரைக்கு சொந்தமான கல்வி நிறுவனங்கள் ஆக்கிரமித்துள்ள நிலங்களை மீட்க வேண்டுமென திருவள்ளூர் ஆட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பருத்திப்பட்டு கோனம்பேடு கிராம பொது நல சங்கத்தின் தலைவரான ஜி.கருணாநிதி சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2021-ம் ஆண்டு தாக்கல் செய்திருந்த மனுவில், “எங்கள் கிராமத்தில் அதிமுக எம்.பி. தம்பிதுரைக்கு சொந்தமான செயின்ட் பீட்டர்ஸ் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் கலை அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி மையம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த கல்வி நிறுவனங்களுக்காக மின்சார துணை நிலையம் அமைக்கவும், பாதை அமைக்கவும், மாணவ, மாணவியருக்கான தங்கும் விடுதிகள் கட்டவும், சுற்றுச்சுவர் கட்டவும் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்கள், நீர்நிலை புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

ஆனால் எங்கள் கிராமத்தில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில் விளையாட்டு மைதானம், நூலகம், ஆய்வகம், கூடுதல் வகுப்பறைகள், மாணவர்களுக்கான கூடுதல் கழிப்பறைகள் என எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லை. இதனால் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படாமல் உள்ளது.

எங்கள் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் போன்ற வசதிகளும் இல்லை. எனவே தனியார் கல்வி நிறுவனம் ஆக்கிரமித்துள்ள அரசு நிலங்களை மீட்டு, அவற்றை அரசு பள்ளியின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்” எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.சுரேந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது திருவள்ளூர் ஆட்சியர் எம். பிரதாப் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், “சம்பந்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் அரசுக்கு சொந்தமான 2,476 சதுர மீட்டர் அளவுக்கு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அதில் கல்லூரிக்கான கட்டிடங்களையும், பாதை மற்றும் சுற்றுச்சுவரையும் அமைத்துள்ளது.

இந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி சம்பந்தப்பட்ட அரசு நிலங்களை மீட்க ஆவடி வட்டாட்சியர், ஆவடி மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது” எனத் தெரிவித்திருந்தார்.

இந்த அறிக்கையை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், சம்பந்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் வசம் உள்ள அரசு நிலங்களை 12 வார காலத்துக்குள் மீட்க வேண்டுமென திருவள்ளூர் ஆட்சியருக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளனர்.

## 70,000 கணினி ஆசிரியர்கள் சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்க முடிவு!



**கும்பகோணம், மார்ச்.11:** அரசு பள்ளியில் பணி நியமனம் செய்யக் கோரி, வரும் சட்டப்பேரவைத் தேர்தலை புறக்கணிக்க 70 ஆயிரம் கணினி ஆசிரியர்கள் முடிவு செய்துள்ளனர். இந்தியாவிலேயே, தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில்தான் 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை கணினி அறிவியல் பாடம் இல்லாமல் உள்ளது.

மத்திய அரசின் சமக்ரா சிக்சா திட்டத்தின் கீழ் அனைத்து மாநிலங்களும் கணினி அறிவியல் பாடத்தை பிரதான பாடமாகவும், தனிப் பாடமாகவும் கற்றுத் தரும் நிலையில், தமிழக அரசு கணினி அறிவியல் பாடத்தை அரசுப் பள்ளியில் கொண்டு வராமல் உள்ளது.

ஆனால், மத்திய அரசு, கணினி ஆசிரியர்களுக்கு வழங்கும் நிதியை மடைமாற்றம் செய்து, அதை எமிஸ் ஆபரேட்டர்களுக்கு பயன்படுத்து கின்றனர். இதனால், அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கணினி அறிவியல் பாடத்தை கற்றுத் தர ஆசிரியர்களும் இல்லை, பாடங்களும் இல்லை.

மாணவர்கள் 5 பாடங்களை மட்டும் கற்று வருகின்றனர். எனவே, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கணினி அறிவியல் ஆசிரியர்களை பணி நியமனம் செய்ய வேண்டும் என சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு பி.எட். கணினி அறிவியல் வேலையில்லா பட்டதாரிகள் சங்க மாநில துணைத் தலைவர் அ.ஆரோக்கியசாமி கூறியது: தமிழக அரசு, மத்திய அரசு வழங்கிய நிதியை மடைமாற்றம் செய்து கேரளாவைச் சேர்ந்த தனியார் நிறுவனத்துக்கு கணினி ஆய்வகங்களை நிர்வகிக்கும் ஒப்பந்தம் வழங்கி உள்ளது.

அதுமட்டுமல்லாமல், கணினி ஆசிரியர்களை நியமிக்க வந்த நிதியில், அந்தப் பணிக்கு கல்வித் தகுதி இல்லாதவர்களை நியமனம் செய்து அலுவலகப் பணிக்கு மாற்றிக்கொண்டுள்ளனர். இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் பலமுறை முறையிட்டும் உரிய பதில் இல்லை.

இதன்மூலம், 70 ஆயிரம் கணினி ஆசிரியர் குடும்பங்களையும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டனர். எனவே, தமிழக அரசு, அரசுப் பள்ளிகளில் தகுதியான கணினி ஆசிரியர்களை நேரடியாக நியமனம் செய்ய வேண்டும்.

மத்திய அரசு வழங்கும் நிதியை கணினி ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் 70 ஆயிரம் கணினி ஆசிரியர் குடும்பங்கள் ஒட்டுமொத்தமாக சட்டப்பேரவைத் தேர்தலை புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# “தவெகவுடன் கூட்டணி பேச்சை பாஜக நடத்தவில்லை” - நயினார் நாகேந்திரன் தகவல்

**சென்னை, மார்ச்.11:** தவெக-வுடன் கூட்டணி பேச்சை பாஜக நடத்தவில்லை என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தவெகவுடன் பாஜக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை. திருச்சியில் நடைபெற உள்ள பாஜக பொதுக்கூட்டத்தில் தவெகவுடன் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் என்பது வதந்தி. கரூர் விவகாரத்தில் தவெக தலைவர் விஜய்-க்கு தற்போது 3-வது முறையாக சிபிஐ சம்மன் கொடுத்துள்ளது. இதற்கும், பாஜகவுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இதுவரை தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை தொடங்கவில்லை.

தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் குறித்து பிரதமர் மோடி இங்கு மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலும் பேசியுள்ளார் என்பதை எதிரணியினர் மறந்து விட்டார்கள். தமிழுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் திமுக என்ன செய்துள்ளது என்பதை முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் யாரும் கேட்பது இல்லை. சொத்து வரியை உயர்த்த மாட்டோம் என்றார்கள், 300 சதவீதம் உயர்த்தி உள்ளார்கள்.

மின் கட்டணம் மாதம் ஒருமுறை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று சொன்னதையும் நிறைவேற்றவில்லை. சிலிண்டருக்கு ரூ.100, பெட்ரோலுக்கு ரூ.10, டீசலுக்கு ரூ.5 குறைப்பதாக சொன்னார்கள், அதையும் செய்யவில்லை. ஆயிரம் தடுப்பணைகள் கட்டுவோம் என்றார்கள், ஆனால் ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை. இதனால், ஆண்டுக்கு 200 டிஎம்சி தண்ணீர் கடலில் வீணாக கலக்கிறது.

தமிழகத்தில் திமுக ஆட்சியில் 34 லாக் அப் மரணங்கள் நடந்துள்ளன. தினமும் படுகொலைகள் நடக்கின்றன. அதேபோன்று கஞ்சா போதையில் சாலையில் செல் பவர்களை, விரட்டி விரட்டி வெட்டுகிறார்கள். முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில், அந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு படுமோசமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் பனியன் பேக்கிங் நிறுவனத்தில் தீ விபத்து - பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதம்



**திருப்பூர், மார்ச்.11:** பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் தனஞ்ஜெயன். திருப்பூர் வளையங்காடு பகுதியில் குடியிருந்து வருகிறார். இவர் லட்சுமி நகர் பகுதியில் உள்ள 2 மாடி கட்டிடத்தின் 2-வது மாடியில் அயனிங் மற்றும் பேக்கிங் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இதில் 10-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் நேற்று இரவு வேலை முடிந்து நிறுவனமானது பூட்டப்பட்டு தொழிலாளர்கள் வீட்டிற்கு சென்றனர். இன்று காலை நிறுவனத்தில் இருந்து கரும்புகை வெளியேறியது. பின்னர் சிறிது நேரத்தில் மளமளவென தீப்பிடித்து எரிந்தது. இதனைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வடக்கு தீயணைப்பு நிலைய வீரர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் நிறுவனத்தில் இருந்த ஏராளமான பின்னலாடைகள், காட்டன் பாக்ஸ்கள், பாலி பேக்குகள் உள்ளிட்ட பொருட்கள் தீயில் எரிந்து சேதம் அடைந்தது. அவற்றின் மதிப்பு பல லட்சம் இருக்கும்.

மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்ற கோணத்தில் திருப்பூர் வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மூளைச்சாவு அடைந்த அங்கன்வாடி ஆசிரியை உடல் உறுப்பு தானம்

**தியாகராஜநகர், மார்ச்.11:** இடைகால் பகுதியை சேர்ந்தவர் முனியம்மாள் (49). இவர் அங்கன்வாடியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் கடந்த 7ம்தேதி அன்று மாலை 3 மணி அளவில் அம்பாசமுத்திரத்திலிருந்து, தனது வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது அம்பாசமுத்திரம் கலை கல்லூரி அருகில் பின்னால் வந்த கார் மோதியதில் விபத்துக்குள்ளானார்.

பலத்த காயம் ஏற்பட்டு அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக முதலுதவிக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் உயர் சிகிச்சைக்காக அன்று மாலை 5 மணி அளவில் நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ள அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவரின் மூளையில் பலத்த காயம் ஏற்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளார் என்பதை தெரிவித்தனர்.

மறுநாள் 8ம்தேதி அன்று அவரின் மூளையின் செயல்பாட்டை கண்டறிவதற்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறிக்கை முடிவில் அவருடைய மூளையின் செயல்பாடு இல்லை, அவர் மூளை சாவு அடைந்தார் என்பதனை குடும்ப உறவினர்களிடம் தெரிவித்தனர்.

அதன்பின் குடும்ப உறுப்பினருடன் ஆலோசித்து முனியம்மாளின் உடல் உறுப்புகளான கல்லீரல், இரு சிறுநீரகங்கள், இரு கருவிழிகள் மற்றும் தோல் தானமாக கொடுக்க முன்வந்தனர். நேற்று அவரது உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டு அவரின் உடலுக்கு டீன் டாக்டர் ரேவதி பாலன் தலைமையில் மருத்துவர்கள் மரியாதை செய்து உறவினர்களிடம் உடலை ஒப்படைத்தனர்.

# சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும்: காவல் ஆணையர் உத்தரவு

**சென்னை, மார்ச்.11:** சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்ற 2,364 துப்பாக்கிகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என, காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சென்னை காவல் ஆணையர் அருண் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

அதற்கு முன்னரே தேர்தல் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளில் சென்னை காவல்துறை ஈடுபட்டுள்ளது.

அனுமதி பெற்று வைத்துள்ள 2,364 துப்பாக்கிகளை உடனடியாக திரும்ப ஒப்படைக்க சம்மந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளோம். காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உட்பட சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 சட்டப்பேரவை தொகுதிகள் வருகிறது.

அவற்றில் 5,445 வாக்குச்சாவடிகள் உள்ளன. இவற்றில் 1,077 பதற்றமானவை. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட உள்ளது. சென்னையில் 5,055 ரவுடிகள் உள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறையில் உள்ளனர்.

இவர்களில் 2,300 ரவுடிகளிடம் எந்த குற்றமும் செய்ய மாட்டோம் என எழுதி வாங்கி உள்ளோம். இந்த உறுதிமொழியை மீறினால் பிணையில் வெளிவர முடியாதபடி சிறையில் அடைக்கப்படுவர். பல ரவுடிகள் சென்னைக்குள் நுழையாதபடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்கள்

வதந்தி, அவதூறு, உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்படுவதை தடுக்க சமூக வலைதளங்களை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணத்தை பறிமுதல் செய்ய 56 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது.

அவர்களுடன் ஒருங்கிணைந்து போலீஸார் பணியாற்றுவார்கள். சென்னையில், இதுவரை 7 இடங்களில் மட்டுமே போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை முன்னிட்டு 350-க்கும் மேற்பட்ட இடங்களில் பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மேலும், சென்னையில் ஒரு இடத்தில், ரோடு ஷோ நடத்த அனுமதிப்பது குறித்தும் ஆலோசிக்கிறோம். தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட மத்திய தொழில் பாதுகாப்பு படையினரும் வருகின்றனர். இவ்வாறு ஆணையர் தெரிவித்தார். அப்போது, நுண்ணறிவு பிரிவு துணை ஆணையர் ராமமூர்த்தி உடன் இருந்தார்.

# வேளச்சேரி - பரங்கிமலை வழித்தடத்தில் நேற்று தொடங்க இருந்த ரயில் சேவை தள்ளிவைப்பு

**சென்னை, மார்ச்.11:** வேளச்சேரி - பரங்கிமலை பறக்கும் ரயில் வழித்தடத்தில் இன்று தொடங்க இருந்த ரயில் சேவை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக சில பணிகளை முடிக்க ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அறிவுறுத்தியுள்ளதால், இப்பாதையில் ரயில் சேவை தாமதமாகி உள்ளது.

இதனால், பயணிகள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர். சென்னை கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தை பரங்கிமலை வரை 5 கி.மீ. தொலைவுக்கு நீட்டிக்கும் பணி 17 ஆண்டுகளுக்கு பிறகு, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவடைந்தது.

இதையடுத்து, இத்தடத்தில் கடந்த ஆண்டு நவ.7, டிச.15 ஆகிய தேதிகளில் அடுத்தடுத்து சரக்கு ரயில் இயக்கி சோதிக்கப்பட்டன. இது தொடர்பாக, ரயில்வே பாதுகாப்பு ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து வேளச்சேரி - பரங்கிமலை ரயில் வழித்தடத்தில் மார்ச் 10-ம் தேதி (இன்று முதல்) மின்சார ரயில் சேவை தொடங்கப்படும் என்று தெற்கு ரயில்வே பிப்.25-ம் தேதி அறிவித்தது.

இதையடுத்து, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் ஆகிய நிலையங்களில் பயணிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தும் பணி நடைபெற்றது. மேலும், இத்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர் ஜனக் குமார் கர்க் கடந்த 5-ம் தேதி ஆய்வு செய்தார்.

தண்டவாள அமைப்பு, மேம்பாலக் கட்டமைப்புகள், மின்சார வழித்தடங்கள், சிக்னல் மற்றும் இன்டர்லாக்கிங் அமைப்புகள் உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகளை ஆணையர் ஆய்வு செய்தார்.

ஏசி மின்சார ரயில் மூலமாக அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இச்சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். எனவே, இன்று முதல் திட்டமிட்டப்படி, மின்சார ரயில் சேவை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**அறிக்கை வரவில்லை**

இந்நிலையில், இன்று தொடங்க இருந்த ரயில் சேவை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து, தெற்கு ரயில்வே வட்டாரங்கள் கூறும்போது, “ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர், இந்த மார்க்கத்தில் சில பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளார்.

அவற்றை சரிசெய்ய தெரிவித்துள்ளார். அதே நேரத்தில், நிபந்தனையுடன் அனுமதி கூட வழங்கவில்லை. அவற்றை முடித்த பிறகே, அனுமதி வழங்கப்படும்” என்று தெரிவித்தனர்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: பரங்கிமலை - வேளச்சேரி மார்க்கத்தில் ரயில் சேவை தொடங்குவது குறித்து, தலைமை ரயில்வே பாதுகாப்பு ஆணையரிடம் இருந்து அறிக்கை வரவில்லை. பாதுகாப்பு ஆணையர் கடந்த சனிக்கிழமை (7-ம் தேதி) தான் டெல்லிக்கு சென்றார். 9-ம் தேதி (நேற்று) அறிக்கை வரவேண்டும்.

அறிக்கை வர ஓரிரு நாட்கள் ஆகலாம். வந்தபிறகே, ரயில் சேவை தொடங்கும்” என்றனர். எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைமேடை சீரமைப்பு பணி நடைபெறுவதால், புறநகர் மின்சார ரயில் சேவை குறைக்கப்பட்டுள்ளது.

இதனால், பயணிகள் தினமும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், பரங்கிமலை -வேளச்சேரி தடத்தில் இன்று ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்த்திருந்த மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர்.

# 9 கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 300 கிலோ தங்கம்: மும்பை உருக்காலைக்கு அனுப்பிவைப்பு

**திருச்சி, மார்ச்.11:** திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், ஈச்சனாரி விநாயகர் கோயில், பண்ணாரி மாரியம்மன் கோயில் உள்ளிட்ட 9 கோயில்களில் 296.

600 கிலோ தங்கம் பக்தர்கள் மூலம் காணிக்கையாக வரப்பெற்றன. இந்த தங்கத்தை மும்பையில் உள்ள மத்திய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த தங்கத்தை பொதுத்துறை வங்கியில் ஒப்படைக்கும் நிகழ்ச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் நேற்று நடைபெற்றது.



இதில், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் துரைசாமி ராஜு, ரவிச்சந்திரபாபு, ஆர்.மாலா ஆகியோர் முன்னிலையில் வங்கியின் திருச்சி மண்டல மேலாளர் எல்.வேலப்பனிடம், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஒப்படைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இணை ஆணையர்கள் இரா.வான்மதி, எஸ்.ஞானசேகரன், எம்.சூரியநாராயணன், வங்கியின் மண்டல முதன்மை மேலாளர் பி.ரமேஷ், மண்டல துணைமேலாளர் எம்.நவீன், சமயபுரம் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இளங்கோவன் மற்றும் பல்வேறு கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர்கள் பங்கேற்றனர்.

கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் 21 கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பயன்படுத்த இயலாத பொன் இனங்களை உருக்கி கிடைக்கப் பெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லி கிராம் சுத்தத்தங்கக் கட்டிகள், பொதுத்துறை வங்கி ஒன்றின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த கோயில்களின் பெயரில் தங்கக் கட்டிகளாக முதலீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஆண்டுக்கு கோயில்களுக்கு ரூ.17.75 கோடி வட்டித் தொகை கிடைக்கிறது என இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அரசியல் கார்னர்

# ஓபிஎஸ் வீட்டில் மீண்டும் ஜெயலலிதா புகைப்படம்: சமூக வலைதளங்களில் வைரல்



**சென்னை, மார்ச்.11:** முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பிப்.27-ம் தேதி சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து திமுகவில் இணைந்தார். இதனைத் தொடர்ந்து பெரியகுளம் அக்ரஹாரத்தில் அவரது வீட்டில் இருந்த ஜெயலலிதா போட்டோ அகற்றப்பட்டது. பின்பு அவரது வீட்டின் முன்புற கதவில் இருந்த அதிமுக சின்னமான இரட்டை இலை கட்டிங் இயந்திரம் மூலம் வெட்டி எடுக்கப்பட்டது. தொடர்ந்து வீட்டின் முகப்பில் இருந்த அதிமுக வண்ணமும் மாற்றப்பட்டது.

முழுவதும் திமுகவில் ஐக்கியமான நிலையில் கடந்த 7-ம் தேதி தனது ஆதரவாளர்களுடன் இணைப்பு விழா ஒன்றையும் மதுரையில் ஓபிஎஸ் நடத்தினார். இதில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு ஓபிஎஸ்.குறித்து பெருமையுடன் பேசினார்.

இந்நிலையில் ஓபிஎஸ்.வீட்டில் மீண்டும் ஜெயலலிதா படம் இருப்பதாக சமூக வலைதளங்களில் புகைப்படம் பரவி வருகிறது. ஓபிஎஸ்அணியைச் சேர்ந்த ரெங்கநாதன் என்பவர் நேற்று தனது முகநூல் பக்கத்தில் ஒரு புகைப்படத்தை பதிவு செய்திருந்தார். மதுரையில் நடைபெற்ற இணைப்பு விழாவுக்குச் சென்று விட்டு பெரியகுளத்தில் ஓ.பன்னீர்செல்வத்தை சந்தித்து குழுவாக எடுத்துக் கொண்ட போட்டோதான் அது. இந்த புகைப்படத்தின் பின்னணியில் ஜெயலலிதாவும், ஓ.பன்னீர்செல்வமும் இணைந்திருக்கும் படம் உள்ளது.

கடந்த வாரம் ஓபிஎஸ்.வீட்டில் இருந்து ஜெயலலிதா படங்கள் அனைத்தும் நீக்கப்பட்ட நிலையில் தற்போது இந்தப் படம் புதியதாக வைக்கப்பட்டுள்ளது என்று நெட்டிசன்கள் தெரிவித்து வருகின்றனர். இது குறித்து ஓபிஎஸ்.தரப்பைச் சேர்ந்த சிலர் கூறுகையில், “ஓபிஎஸ் திமுகவில் இணைந்தது அவரது இளைய மகன் ஜெயபிரதீப்புக்கு அவ்வளவாக உடன்பாடில்லை. இது குறித்து தனது அதிருப்தியை தெரிவித்து வந்துள்ளார். அவரது வற்புறுத்தலின் பேரில் ஜெயலலிதா படத்தை வீட்டில் மீண்டும் வைத்திருக்கலாம் என்றனர். இந்த புகைப்படம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# இது தான் சமூகநீதி காக்கும் லட்சணமா? - தி.மு.க. அரசை சென்னை:



**சென்னை, மார்ச்.11:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் தவிர பிற பணிகளுக்கு இனி நிரந்தர அடிப்படையில் எவரையும் நியமிக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த செய்தி உண்மையானதாக இருந்தால் சமூகநீதிக்கும், கண்ணியமான மனிதவாழ்க்கைக்கும் எதிரான இந்த நடவடிக்கை கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற மக்கள் நலவாழ்வுத் துறையின் ஆய்வுக் கூட்டத்தில், நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு செலவுகளைக் குறைக்கும் வகையில் அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள், மருந்தாளுனர்கள், ஆய்வக நுட்புனர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் இனி நிரந்தரமாக நியமிக்கப்படக் கூடாது என்றும், ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே நியமிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிகின்றன.

அரசுத்துறைகளில் டி பிரிவு பணிகளில் மட்டும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சி பிரிவு பணியிடங்களுக்கும் இந்த முறையை நீட்டிப்பது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எம்.எப் பரூக்கி, சி.சந்திரமவுலி, தேவ. ஜோதி ஜெகராஜன் உள்ளிட்ட ஐவர் அடங்கிய மனிதவள சீர்திருத்தக் குழுவை 18.10.2022-ஆம் நாளிட்ட 115 எண் கொண்ட அரசாணை மூலம் தமிழக அரசு அமைத்தது. அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அக்குழுவின் ஆய்வு வரம்புகள் மறு ஆய்வு செய்யப்படும் என அரசு அறிவித்தது.

ஆனால், அவ்வாறு செய்யப்படாததால், பரூக்கி தலைமையிலான குழு பணியை தொடங்காத நிலையில், எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

அதையும் கடந்து இது போன்ற கொள்கை முடிவுகள் அமைச்சரவையில் தான் எடுக்கப்பட வேண்டும். மாறாக, இந்த முடிவை தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எடுக்கிறார்கள் என்றால் முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் பொம்மைகள் தானா?

சுகாதாரத்துறையில் ஏற்கனவே மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பணி நிலைப்பு செய்யும் நடைமுறை உள்ளது. இந்த நடைமுறையே மாற்றப்பட வேண்டும்; அனைத்துப் பணியாளர்களும் நேரடியாக நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை ஆகும்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்படும் போது அதில் இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்படாது. இது சமூகநீதியை படுகொலை செய்யும் செயலாகும். இது தான் திமுக அரசு சமூகநீதியை காக்கும் லட்சணமா? இதைத் தான் திமுக விரும்புகிறதா? என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கமளிக்க வேண்டும், மக்கள் நலவாழ்வுத்துறை உள்பட அனைத்துத் துறைகளில் ஒப்பந்த முறை நியமனங்கள் ரத்து செய்யப்படும்; நிரந்தர அடிப்படையில் மட்டுமே பணியாளர்கள் நியமிக்கப்படுவார் என்றும் முதலமைச்சர் அறிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com